بسم الله الرحمن الرحيم نحمده ونصلّی علی رسوله الکریم وعلی عبده المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 26

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

28 துல்கஅதா 1437 ஹிஜ்ரி கமரி 1 தபூக் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி 1 செப்டம்பர் 2016

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**வானத்தின் சாட்சிகளும் உறுதியான சான்றுகளாக இருக்கின்ற திருக்குர்ஆனின் வசனங்களும் நபிமொழிகளின் தெளிவான கூற்றுக்களும் என்னை நானே வாக்களிக்கப்பட்ட மஸீஹாக ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கின்றது. நான் மறைவான அறையில் இருந்து வந்தேன். எவரும் என்னை அறிந்திருக்கவில்லை. தனிமையில் மூலையில் அமர்ந்திருந்த என்னை பலவந்தமாக அவன் வெளியில் கொண்டு வந்தான். மறைவாக இருந்து மறைவாகவே மரணிக்க வேண்டும் என்றே நான் விரும்பினேன். ஆனால், நான் உன்னை முழு உலகிலும் கண்ணியத்துடன் புகழ் பெறச் செய்வேன் என்று அவன் கூறினான்.**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இப்போது நாம் இந்த சில சந்தேகங்களுக்குப் பதில் கூறுகின்றோம். இவற்றிற்கான பதிலை உண்மையை வேண்டுகின்ற சிலர் என்னிடம் கேட்டிருக்கின்றனர். அவற்றில் பெரும்பாலான சந்தேகங்கள் பட்டியாலாவில் அஸிஸ்டண்ட் சர்ஜனாக இருந்து வருகின்ற அப்துல் ஹகீம் கான் தனது எழுத்துகள் அல்லது சொற்பொழிவின் மூலம் மக்களிடம் ஏற்படுத்தியவை ஆகும். அவர், தான் முர்தத் ஆகி விட்டதன் மீது எத்தகைய முத்திரையைப் பதித்து விட்டார் என்றால் இப்போது ஒருவேளை இதே நிலையில்தான் அவரது முடிவு இருக்கும். ஷாஜஹான்பூரைச் சார்ந்த முன்ஷி புர்ஹானுல் ஹக் சாஹிப் அவர்கள் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் அந்த சில சந்தேகங்களுக்கான பதிலை எழுதியுள்ளேன். அவற்றை மிகவும் பணிவுடன் அவர்கள் தமது கடிதத்தில் வெளிப்படுத்தியிருந்தார்கள். நான் இதற்கு கீழே முன்ஷி புர்ஹானுல் ஹக் அவர்களின் கடிதத்திலுள்ள அசல் சொற்களை ஒவ்வொரு கேள்வியிலும் எழுதி அதற்கான பதிலையும் தருகின்றேன். وبالله التوفيق

கேள்வி 1 : (எனது நூலான) திர்யாகுல் குலூபின் 157 -வது பக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

“இந்த இடத்தில் நான் எனது இந்த சொற்பொழிவில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை விட எனக்கு சிறப்பு இருப்பதாகக் கூறியுள்ளேன் என்று எவரும் எண்ண வேண்டாம். ஏனென்றால், இது நபியல்லாத ஒருவருக்கு நபியின் மீது இருக்க முடிகின்ற ஓர் அம்சத்தில் (மட்டும்) இருக்கின்ற சிறப்பாகும்.” பிறகு ரிவியூவின் தொகுதி 1 -ன் எண்.6 -ன் 257 -வது பக்கத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது: “இறைவன் இந்த உம்மத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹை அனுப்பினான். அவர் அந்த முதலாவது மஸீஹை விட தனது முழு மகத்துவத்துடன் மிகவும் சிறந்து விளங்குகின்றார்.” பிறகு ரிவியூவின் 478 -வது பக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: “எவனது கையில் எனது உயிர் இருக்கின்றதோ அந்த இறைவன் மீது ஆணையாக! மர்யமின் மகன் ஈஸா எனது காலத்தில் இருந்திருந்தால் என்னால் செய்ய முடிகின்ற பணிகளை அவரால் ஒருபோதும் செய்ய முடியாது. என் மூலமாக வெளிப்படுகின்ற அந்த அடையாளங்களை ஒருபோதும் அவரால் காட்ட முடியாது.” இந்த இரண்டு வாக்கியங்களுக்கிடையில் முரண்பாடு இருக்கின்றது என்பதே இந்த ஆட்சேபனையின் சுருக்கமாகும்.

பதில்: நினைவில் கொள்ளுங்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று என்னை கூறிக் கொள்கின்ற அல்லது மர்யமின் மகன் ஈஸாவை விட என்னை நானே சிறந்தவனாகக் கருதுகின்ற இந்த விஷயங்களால் எனக்கு எந்த மகிழ்ச்சியும் சுயநோக்கமும் இல்லை என்பது அல்லாஹ்வுக்கு நன்றாக தெரியும். இறைவன் எனது மனசாட்சியைப் பற்றி தனது இந்த தூய வஹியில், தானே இவ்வாறு தெரிவித்துள்ளான்: قُلْ أُجَرِّدُ نَفْسِي مِنْ ضُرُوْبِ الْخِطَابِ அதாவது, அவர்களிடம் கூறுவீராக! அதாவது, எனது நிலை என்னவென்றால் எனக்கென்று எந்தப் பட்டம் தரப்படுவதையும் நான் விரும்புவதில்லை. எனது குறிக்கோளும் எனது நோக்கமும் இந்த எண்ணங்களிலிருந்து மேலானதாகும். ஒரு பட்டத்தை வழங்குவது இறைவனின் பணியாகும். இதில் எனது எந்த தலையீடும் இல்லை. இவ்வாறு ஏன் எழுதப்பட்டது? சொற்களில் ஏன் முரண்பாடு உருவாகி இருக்கின்றது? என்ற விஷயம் இருக்கின்றது. இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி புரிந்து கொள்ளுங்கள். இது எவ்வகையிலான முரண்பாடாக இருக்கின்றது என்றால் இது மர்யமின் மகன் ஈஸா வானத்திலிருந்து இறங்குவார் என்று நான் பராஹீனே அஹ்மதிய்யாவில் எழுதியது போன்றதாகும். ஆனால், பிறகு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நானே ஆவேன் என்றும் நான் எழுதினேன். இந்த முரண்பாட்டிற்கும் இதுவே காரணமாக இருந்தது. அதாவது, இறைவன் பராஹீனே அஹ்மதிய்யாவில் எனக்கு ஈஸா என்று பெயர் வைத்திருந்தும் உனது வருகையைப் பற்றிய செய்தியை இறைவனும் அவனது தூதரும் தெரிவித்துள்ளனர் என்று என்னிடம் கூறியிருந்தும் முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் இந்தக் கொள்கையில் உறுதியாக இருந்ததனாலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்திலிருந்து இறங்குவார்கள் என்பது எனது கொள்கையாகவும் இருந்ததனாலும் நான் இறைவனது வஹிக்கு வெளிப்படையான பொருள் கொள்வதை விரும்பவில்லை. மாறாக, அந்த வஹிக்கு நான் விளக்கம் கூறினேன். எனது கொள்கையும் பொதுவான முஸ்லிம்களின் கொள்கையாகவே இருந்தது. அதனையே நான் பராஹீனே அஹ்மதிய்யாவில் வெளியிட்டேன். ஆனால், இதற்குப் பிறகு வர வேண்டிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நீரே ஆவீர் என்று இது தொடர்பாக மழையைப் போன்று இறை அறிவிப்பு இறங்கியது. அத்துடன் அதற்கு ஆதரவாக நூற்றுக்கணக்கான அடையாளங்களும் வெளிப்பட்டன. பூமி, வானம் ஆகிய இரண்டுமே என்னை உண்மைப் -படுத்துவதற்காக நின்றன. இறைவனது ஒளிமயமான அடையாளம் என்னை வற்புறுத்தி இறுதிக் காலத்தில் வர வேண்டிய மஸீஹ் நானே ஆவேன் என்ற கருத்தின் பக்கம் என்னைக் கொண்டு வந்தது. நான் எழுதியதே எனது கொள்கையாக இருந்தது. இதற்குப் பிறகு நான் இதை மட்டும் போதுமானதாக கருதாமல் இந்த வஹியை திருக்குர்ஆனுடன் சேர்த்து பார்க்கும் போது உறுதிமிக்க சான்றுகளால் இருக்கின்ற திருக்குர்ஆன் வசனங்களிலிருந்து உண்மையின் மர்யமின் மகன் ஈஸா இறந்து விட்டார் என்பதும் இறுதி கலீஃபா வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற பெயரில் இந்த உம்மத்திலிருந்து வருவார் என்பதும் நிரூபிக்கப்பட்டு விட்டது. பகல் தோன்றும்போது எந்த இருளும் எஞ்சியிருப்பதில்லை. இவ்வாறே நூற்றுக்கணக்கான அடையாளங்களும் வானத்தின் சாட்சிகளும் உறுதியான சான்றுகளாக இருக்கின்ற திருக்குர்ஆன் வசனங்களும் நபிமொழிகளின் தெளிவான கூற்றுக்களும் நான் என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹாக ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கின்றது. அந்த இறைவன் என்னிடம் மகிழ்ச்சியடைய வேண்டும் என்பதே எனக்கு போதுமானதாக இருந்தது. எனவே, இவ்விஷயத்தில் ஒருபோதும் எனக்கு எந்த ஆசையும் இருக்கவில்லை. நான் மறைவான அறையில் இருந்து வந்தேன்.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இன்றைய நாட்களில் உலகின் நிலை மிக வேகமாக மோசமாகி வருகிறது. மேலும் துரதிஷ்டவசமாக இதற்கு முஸ்லிம்களின் சில பிரிவுகள் காரணமாக இருக்கின்றன. முஸ்லிம் நாடுகளின் தலைவர்கள் இஸ்லாத்திற்கு எதிரான சக்திகள் அவர்களை தங்கள் பிடியில் கொண்டு வர முயற்சி செய்கின்றன என்பதையும் புரிவதில்லை. இஸ்லாத்தின் பெயரால் அல்லது ஜிஹாதின் பெயரால் நடக்கின்ற அநீதிகளுக்கும் இஸ்லாத்தின் போதனைகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இதேபோல் மக்களின் மீது அநீதியிழைக்கும் அரசாங்கங்களுக்கும் இஸ்லாமிய போதனைகளுக்கும் தொலைதூரத் தொடர்பு கூட இல்லை.

எல்லாவற்றையும் விட அமைதியையும் நீதியையும் நிலைநாட்டுவதைப் பற்றி இஸ்லாம்தான் வாதம் செய்கின்றது. அமைதி மற்றும் நீதியை நிலைநாட்டுவது இஸ்லாமிய அரசாங்கங்களின் மிகப்பெரிய கடமையாகும் என்று கூறும் இஸ்லாமிய அரசாங்கங்கள்தான் அமைதி மற்றும் நீதியை சீர்குலைக்கின்றனர். குழப்பம் ஏற்பட்டிருக்கின்ற எல்லா முஸ்லிம் நாடுகளிலும் சுயநலவாதிகள் இதிலிருந்து பயனடையக் காரணம் அரசாங்கங்கள் மக்களின் நன்மைக்காவும், முன்னேற்றத்திற்காகவும் பணியாற்றுவதற்குப் பகரமாக தமது சுயநலன்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றன.

திருக்குர்ஆனின் போதனையை சிந்திக்காவிட்டாலும் முஸ்லிமாக இருக்காவிட்டாலும் சிந்தித்து அடி எடுத்து வைக்க வேண்டும் என்பதே அறிவுடைமையின் எதிர்பார்ப்பாகும். முஸ்லிம்களின் கருத்து வேறுபாடுகள் அல்லது அவர்களின் நாடுகளில் ஏற்படுகின்ற நிம்மதியின்மையின் பலன் யாருக்கு சென்றடைகிறது என்று பாருங்கள். ஆனால், இவர்களுக்கு புரியவில்லை. எனவே, இந்த நாட்களில் இந்த முஸ்லிம் நாடுகளுக்காக அதிகமாக துஆ செய்ய வேண்டிய தேவை உள்ளது. அல்லாஹ் இவர்களுக்கு அறிவை வழங்குவானாக!

தீவிரவாத அமைப்புகள் இந்த மேற்கத்திய நாடுகளில் அப்பாவி உயிர்களைக் கொல்கின்றனர். இவ்வாறு மிகவும் அநீதியான செயலைச் செய்து இஸ்லாத்தை கேவலைப்படுத்த ஆரம்பித்துள்ளனர். இஸ்லாத்தை அவப்பெயருக்குள்ளாக்க இஸ்லாத்திற்கு எதிரான சக்திகள் முஸ்லிம் அல்லாத நாடுகளில் அதுபோன்ற செயல்களை இவர்களைக் கொண்டும் செய்யலாம் அல்லது செய்வார்கள் என்பதும் கூட தொலைவில் இல்லை. அதன் மூலம் இஸ்லாத்தை அவப்பெயருக்குள்ளாக்க வேண்டும். மேலும் அவர்களுக்கு உதவி செய்கிறோம் என்ற பெயரில் அல்லது உலகை தீவிரவாதத்திலிருந்து காப்பாற்றுகிறோம் என்ற பெயரில் தங்களது ஆதிக்கத்தை அந்த நாடுகளில் நிலைநாட்ட ஒரு காரணம் கிடைப்பதற்காக அவர்கள் அவ்வாறு செய்யலாம்.

அல்லாஹ் நமது மார்க்கத்தின் பெயரை இஸ்லாம் என்று வைத்துள்ளான். இந்த பெயரே தீவிரவாதம், வற்புறுத்தல் மற்றும் அநீதியை மறுத்து அமைதி, சாந்தி, சமாதானத்தின் தூதுச் செய்தியை வழங்குகிறது. மேலும் இஸ்லாத்தின் பொருளோ அமைதியில் இருப்பது மற்றும் அமைதியை வழங்குவதாகும்.

உண்மையில் உலகிலுள்ளவர்களது உள்ளங்களை வெல்ல வேண்டும் என்றால் இஸ்லாத்தை உலகில் பரப்ப வேண்டும் என்றால் அதன் அழகிய போதனைகளின் மூலமாகவே அது முடியும். தீவிரவாதிகள் மற்றும் ஆலிம்கள் தாமே உருவாக்கிய போதனைகளால் அதை செய்ய முடியாது. ஆனால் எவரை அல்லாஹ் இந்தக் காலத்தில் இமாமாக அனுப்பி இருக்கின்றானோ அவரால் மட்டுமே இந்த வழியைக் காட்ட இயலும். நீதியை நிலைநாட்டுவதற்காக அல்லாஹ் அனுப்பியவரே நீதியை நிலைநாட்ட இயலும். அல்லாஹ் அவரை நெறி நீதி தீர்ப்பவராக அனுப்பியுள்ளான். எவருக்கு அல்லாஹ் இந்த அந்தஸ்தை வழங்கியுள்ளானோ அவரே இஸ்லாத்தின் அழகிய போதனைகளை நிலைநாட்ட முடியும்.

இஸ்லாத்தின் பெயருக்கு அவமரியாதை ஏற்படுத்தக்கூடிய ஒவ்வொரு செயலுக்குப் பிறகும் நாம் என்னுடைய மார்க்கத்தின் அடித்தளம் அமைதி மற்றும் சமாதானத்தில் உள்ளது என்பதை உலகிற்குக் கூற வேண்டும். அஹ்மதிகளாகிய நாம் நினைவில் கொள்ள வேண்டும். இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்களில் எவரேனும் அமைதி மற்றும் சமாதானத்தை சீர்குலைக்கக்கூடிய வேலையைச் செய்தால் அதனை அவர்கள் தமது சுயலன் கருதியோ அல்லது தனது அமைப்பின் சுயநலன் கருதியோ செய்கின்றனர். இதற்கும் இஸ்லாத்தின் போதனைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

எதிர்ப்பின் இந்தக் காலகட்டத்தில் இஸ்லாத்திற்கு எதிராக முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்தும் ஜமாஅத்திற்கு எதிராக பிற முஸ்லிம்களிடமிருந்தும் பகைமை வெளிப்படும் இந்தத் தருணத்தில் நாம் ஞானத்துடனும், புரிதலுடனும் செயல்பட வேண்டும்.

இஸ்லாம் உலகில் பரவும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. மேலும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி இப்போது அஹ்மதிய்யத்தின் மூலமே நடைபெறும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இது அல்லாஹ் விதித்த ஒன்றாகும். ஆனால், இந்த முன்னேற்றத்தின் காட்சியை நமது வாழ்நாளிலேயே காண வேண்டும் என்பதற்கு நாம் முயற்சியும் செய்ய வேண்டும். துஆவும் செய்ய வேண்டும். மேலும் நமது பலவீனங்கள் இந்த முன்னேற்றத்தை நம்மிடமிருந்து தூரம் விலக்கி விடக்கூடாது. எனவே, நமது பலவீனங்கள் மறைக்கப்படுவதற்கும் அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதற்கும் நமக்கு கடின உழைப்பு மற்றும் துஆவின் தேவை உள்ளது.

திருக்குர்ஆன், நபிமொழிகள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சில துஆக்களை குறிப்பாக செய்யுமாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

Belize (பெலிஸ்) நாட்டைச் சார்ந்த மதிப்பிற்குரிய அய்வான் வர்னான் சாஹிப், ரப்வாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய செய்யது நாதிர் செய்யதைன் சாஹிப், அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரைச் சார்ந்த மதிப்பிற்குரிய நதீர் அஹ்மது அயாஸ் சாஹிப் ஆகியோர் வஃபாத் ஆகி விட்டனர். மர்ஹுமீன்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்**
**29 ஜுலை 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **29 வஃபா** மாதம் ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ـ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ـ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ـ إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ـ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ـ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ـ

இன்றைய நாட்களில் உலகின் நிலை மிக வேகமாக மோசமாகி வருகிறது. மேலும் துரதிஷ்டவசமாக இதற்கு முஸ்லிம்களின் சில பிரிவுகள் காரணமாக இருக்கின்றன. முஸ்லிம் நாடுகளின் தலைவர்கள் இஸ்லாத்திற்கு எதிரான சக்திகள் அவர்களை தங்கள் பிடியில் கொண்டு வர முயற்சி செய்கின்றன என்பதையும் புரிவதில்லை. இஸ்லாத்தின் பெயரால் அல்லது ஜிஹாதின் பெயரால் நடக்கின்ற அநீதிகளுக்கும் இஸ்லாத்தின் போதனைகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இதேபோல் மக்களின் மீது அநீதியிழைக்கும் அரசாங்கங்களுக்கும் இஸ்லாமிய போதனைகளுக்கும் தொலைதூரத் தொடர்பு கூட இல்லை. அவர்கள் இஸ்லாமிய போதனைகளுக்கு எதிராக செயல்படுகின்றனர். அப்பாவிகளைக் கொலை செய்யுங்கள் என்று இஸ்லாத்தில் எங்கு எழுதப்பட்டுள்ளது. இவர்கள் இஸ்லாத்தின் பெயரால் முஸ்லிம் அல்லாதவர்களைக் கொலை செய்வதுடன் அதற்கும் மேலாக முஸ்லிம்களும் கொல்லப்படுகின்றனர். அதில் அப்பாவிகளும் அடங்குவர். குழந்தைகள் முதியவர்கள் அனைவரும் அடங்குவர். முஸ்லிம் நாடுகளின் சக்தி பலவீனத்திலும் பலவீனமாகிக் கொண்டிருக்கிறது. இதையே இஸ்லாத்திற்கு எதிரான சக்திகள் விரும்புகின்றனர். இஸ்லாமிய நாடுகள் ஒருபோதும் வலுவடைந்து விடக்கூடாது என்றும் ஒருபோதும் சமூக அளவிலும் பொருளாதார ரீதியிலும் வலுவாகி விடக்கூடாது என்றே அவர்கள் விரும்புகின்றனர்.

முஸ்லிம் நாடுகளின் தலைவர்கள் மற்றும் அவர்களால் வளர்க்கப்பட்ட ஆலிம்கள் இஸ்லாமிய போதனைகளையும் புரிவதில்லை. மேலும் புரிய விரும்பவும் இல்லை. இறைவன் தானே தனது வாக்குறுதி மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை உலகில் நிலைநாட்டுவதற்காக அனுப்பியுள்ள இந்தக் காலத்தின் இமாம் மற்றும் வழிகாட்டியின் பேச்சை இவர்கள் கேட்க மறுக்கின்றனர். அவர் அமைதி மற்றும் நீதியை நிலைநாட்டுவதற்கு எல்லாரையும் விட அதிக தகுதியுடையவராவார். இதன் விளைவாக நாம் பார்ப்பது என்னவென்றால், எல்லாவற்றையும் விட அமைதியையும் நீதியையும் நிலைநாட்டுவதைப் பற்றி இஸ்லாம்தான் வாதம் செய்கின்றது. அமைதி மற்றும் நீதியை நிலைநாட்டுவது இஸ்லாமிய அரசாங்கங்களின் மிகப்பெரிய கடமையாகும் என்று கூறும் இஸ்லாமிய அரசாங்கங்கள்தான் அமைதி மற்றும் நீதியை சீர்குலைக்கின்றனர். குழப்பம் ஏற்பட்டிருக்கின்ற எல்லா முஸ்லிம் நாடுகளிலும் சுயநலவாதிகள் இதிலிருந்து பயனடையக் காரணம் அரசாங்கங்கள் மக்களின் நன்மைக்காவும், முன்னேற்றத்திற்காகவும் பணியாற்றுவதற்குப் பகரமாக தமது சுயநலன்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றன. முஸ்லிம்கள் முஸ்லிம்களைக் கொல்கின்றனர். தலைவர்களிடம் சகிப்புத்தன்மை இல்லை. துருக்கியில் கடந்த நாட்களில் கிளர்ச்சி ஏற்பட்டது. அந்தக் கிளர்ச்சி சந்தேகமின்றி எவ்வகையிலும் இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப சரியானது இல்லைதான். ஆனால், அதன் விளைவாக அரசாங்கம் எடுத்த நடவடிக்கையும் அநீதியானதாகும். அரசாங்கம் மற்றும் அரசியலுக்கு எதிரானவர்கள் அத்தனை பேரையும் அவர்கள் அந்தக் குழப்பத்தில் பங்கெடுக்காமல் இருந்தும் கூட அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்கு எதிர் மறையான நடவடிக்கையும் வெளிப்படுவதை இவர்கள் கண்டும் உள்ளனர். அது உடனடியாகவோ அல்லது சிறிது காலத்திற்குப் பிறகோ வெளிப்படுகிறது.

எவ்வாறிருப்பினும், அநீதி தொடர்ந்து இருந்தால் அதற்கான எதிர்மறையான விளைவும் வெளிப்படுகிறது. பிறகு அந்த எதிர்மறையான விளைவிலிருந்து இஸ்லாத்திற்கு எதிரான சக்திகள் பலனடைகின்றன. பெரும் சக்திகள் தமது ஆயுதங்களை அனுப்புகிறது. இரு தரப்பின் மீதும் அனுதாபமுளளவர்களாக அவர்கள் ஆகின்றனர். ஈராக், லிபியா, சிரியா போன்ற நாடுகளில் இந்த அனைத்தையும் கண்ட பிறகும் முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கு புரியவில்லை. திருக்குர்ஆனின் போதனையை சிந்திக்கா விட்டாலும் முஸ்லிமாக இருக்கா விட்டாலும் சிந்தித்து அடியெடுத்து வைக்க வேண்டும் என்பதே அறிவுடைமையின் எதிர்பார்ப்பாகும். முஸ்லிம்களின் கடுத்து வேறுபாடுகள் அல்லது அவர்களின் நாடுகளில் ஏற்படுகின்ற நிம்மதியின்மையின் பலன் யாருக்கு சென்றடைகிறது என்று பாருங்கள். ஆனால், இவர்களுக்கு புரியவில்லை. எனவே, இந்த நாட்களில் இந்த முஸ்லிம் நாடுகளுக்காக அதிகமாக துஆ செய்ய வேண்டிய தேவை உள்ளது. அல்லாஹ் இவர்களுக்கு அறிவை வழங்குவானாக! பிறகு தீவிரவாத அமைப்புகள் இந்த மேற்கத்திய நாடுகளில் அப்பாவி உயிர்களைக் கொல்கின்றனர். இவ்வாறு மிகவும் அநீதிகரமான செயலைச் செய்து இஸ்லாத்தை கேவலைப்படுத்த ஆரம்பித்துள்ளனர். இஸ்லாத்தை அவப்பெயருக்குள்ளாக்க இஸ்லாத்திற்கு எதிரான சக்திகள் முஸ்லிம் அல்லாத நாடுகளில் அதுபோன்ற செயல்களை இவர்களைக் கொண்டும் செய்யலாம் அல்லது செய்வார்கள் என்பதும் கூட தொலைவில் இல்லை. அதன் மூலம் இஸ்லாத்தை அவப்பெயருக்குள்ளாக்க வேண்டும். மேலும் அவர்களுக்கு உதவி செய்கிறோம் என்ற பெயரில் அல்லது உலகை தீவிரவாதத்திலிருந்து காப்பாற்றுகிறோம் என்ற பெயரில் தங்களது ஆதிக்கத்தை அந்த நாடுகளில் நிலைநாட்ட ஒரு காரணம் கிடைப்பதற்காக அவர்கள் அவ்வாறு செய்யலாம். சரியான இஸ்லாமிய போதனை பற்றிய அறிவு இருக்கும் என்றால் அப்பாவிகளைக் கொலை செய்வது, விமான நிலையங்களிலும், பிற நிலையங்களிலும், பயணிகளையும், குழந்தைகளையும், பெண்களையும், முதியவர்களையும், நோயாளிகளையும் கொல்ல வேண்டும் என்பது இஸ்லாமிய போதனை இல்லை என்று இவர்களுக்கு தெரிவித்திருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போருக்காக வீரர்களை அனுப்பும் போது பெண்களையும், குழந்தைகளையும், முதியவர்களையும், பாதிரிமார்களையும் கொலை செய்யக் கூடாது என்று அவர்களுக்கும் வழிகாட்டல் வழங்கப்பட்டது. ஆயுதத்தை எடுக்காத எந்த நபரின் மீதும் எந்த வகையிலும் முஸ்லிம்களுக்கு எதிராக எவர் போரின் அங்கமாக இருக்கவில்லையோ அவர்களுக்கு இழப்பினை ஏற்படுத்தக் கூடாது என்று வழிகாட்டப்பட்டுள்ளது. (அல்மு:.ஜமுல் அஸ்வது லித் தப்ரானி, பாகம் 3 பக்கம் 154. மன் இஸ்முஹு அலைய்ய ஹதீஸ் 4162. தாருல் :.பிக்ர் அம்மான் உர்துன் 1999. ஷரஹ் மஆனியுல் ஆஸார் பாகம் 2 பக்கம் 126. கிதாபுஸ்ஸய்ர் பாபுஸ் ஸெய்குல் கபீர் ஹல்யுக்தலு :.பீ தாருல் ஹர்பி அம்லா ஹதீஸ் 5067. மத்தபா ரஹ்மானிய்யா உர்து பாஸார் லாஹூர்) கொலை செய்வது என்பது திருக்குர்ஆனின் போதனையும் இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது போதனையும் இல்லை. மேலும் இது அன்னாரது அல்லது அன்னாரின் கலீஃபாக்களுடைய அல்லது அன்னாரது சஹாபாக்களுடைய எந்த செயலிலிருந்தும் நிரூபணமாகவில்லை. அல்லாஹ் நமது மார்க்கத்தின் பெயரை இஸ்லாம் என்று வைத்துள்ளான். இந்த பெயரே தீவிரவாதம், வற்புறுத்தல் மற்றும் அநீதியை மறுத்து அமைதி, சாந்தி, சமாதானத்தின் தூதுச் செய்தியை வழங்குகிறது. மேலும் இஸ்லாத்தின் பொருளோ அமைதியில் இருப்பது மற்றும் அமைதியை வழங்குவதாகும்.

மேலும் அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: அல்லாஹ் அமைதியின் வீட்டிற்கு அழைக்கிறான். **(10:26)** பிறகு முஸ்லிம்கள் தொழுகையில் அல்லாஹ்வின் கருணை மற்றும் அருளை நாடுகின்றனர். ஆனால் இந்த அநீதியாளர்கள் திருக்குர்ஆனையும் ஏற்பதில்லை. அதன்படி செயல்படுவதும் இல்லை. தொழுவதும் இல்லை. இவர்களின் மார்க்கம் மற்றும் ஷரீஅத் புதிய ஒன்றாகும். எவ்வாறிருப்பினும் ஓர் உண்மையான முஸ்லிம் அமைதியை கேட்கும்போது தொழும்போது தீங்குகள் மற்றும் குழப்பத்திலிருந்து தவிர்ந்திருக்கின்றார். தொழுகை தீய மற்றும் விரும்பத்தகாத விஷயங்களிலிருந்து தடுக்கின்றது என அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான். இஸ்லாம் ஸலாத்தின் வழக்கத்தை உருவாக்குங்கள்; ஸலாத்தைப் பரப்புங்கள் என்கிறது. ஸலாம் கூறுவது முஸ்லிம்களுக்கு மட்டும் உரியது இல்லை. இன்றைய நாட்களில் பாகிஸ்தானிலும் ஆலிம்களின் தாக்கத்தினால் பாகிஸ்தான் நாட்டின் சட்டம் முஸ்லிம்களைத் தவிர வேறு யாரும் ஸலாம் கூறக் கூடாது என்று அதிலும் ஆதிக்கம் செலுத்துகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் எவ்வித பாகுபாடுமின்றி அனைவருக்கும் ஸலாம் கூறப்பட்டது. (சஹீஹ் புகாரி கிதாபுல் ஈமான் மக்தபா பாபு அத்ஆமுத் தஆமி மினல் இஸ்லாமி ஹதீஸ் 12)

நான் இஸ்லாத்தின் ஒரு சில சிறப்பம்சங்களை இப்போது கூறியிருக்கின்றேன். அமைதியை நிலைநாட்டுவதற்காக சில விஷயங்களை சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். விளக்கமாகப் பார்த்தால் எந்தக் கோணத்தில் பார்த்தாலும், எந்தக் கட்டளையை எடுத்துக் கொண்டாலும் இஸ்லாம் அமைதி, சாந்தி மற்றும் சமாதானத்தின் மார்க்கமாகும். தீவிரவாத மார்க்கமல்ல. உண்மையில் உலகிலுள்ளவர்களது உள்ளங்களை வெல்ல வேண்டும் என்றால் இஸ்லாத்தை உலகில் பரப்ப வேண்டும் என்றால் அதன் அழகிய போதனைகளின் மூலமாகவே அது முடியும். தீவிரவாதிகள் மற்றும் ஆலிம்கள் தாமே உருவாக்கிய போதனைகளால் அதை செய்ய முடியாது. ஆனால் எவரை அல்லாஹ் இந்தக் காலத்தில் இமாமாக அனுப்பி இருக்கின்றானோ அவரால் மட்டுமே இந்த வழியைக் காட்ட இயலும். நீதியை நிலைநாட்டுவதற்காக அல்லாஹ் அனுப்பியவரே நீதியை நிலைநாட்ட இயலும். அல்லாஹ் அவரை நெறி நீதி தீர்ப்பவராக அனுப்பியுள்ளான். எவருக்கு அல்லாஹ் இந்த அந்தஸ்தை வழங்கியுள்ளானோ அவரே இஸ்லாத்தின் அழகிய போதனைகளை நிலைநாட்ட முடியும். நாம் அஹ்மதிகள் நற்பேறு பெற்றவர்களாவோம். நாம் காலத்தின் இமாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை ஏற்றுக் கொண்டுள்ளோம். மேலும் உலகின் இந்த அநீதியில் இணைவதிலிருந்து பாதுகாப்பவராக இருக்கின்றோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: இஸ்லாம் தனது போதனையை இரண்டு பகுதியாக ஆக்கியுள்ளது. முதலாவது, ஹுகூகுல்லாஹ் அதாவது, அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள். இரண்டாவது ஹுகூகுல் இபாத் அதாவது இறை அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள். அல்லாஹ்வுக்குரிய உரிமை என்னவென்றால் அல்லாஹ்வின் படைப்பினங்களுடன் கருணையுடன் நடந்து கொள்வதாகும். மார்க்கத்தில் முரண்பாடு உள்ள காரணத்திற்காக மட்டும் ஒருவருக்கு துக்கம் கொடுப்பது என்ற வழிமுறை முற்றிலும் சரியானதன்று. கருணை மற்றும் நடந்து கொள்ளும் விதம் என்பது வேறொன்றாகும். மார்க்கத்தில் முரண்பாடு வேறென்றாகும். ஜிஹாது பற்றிய தவறான எண்ணத்தில் இருக்கின்ற இஸ்லாத்தின் அந்தப் பிரிவு நிராகரிப்பாளர்களின் செல்வத்தை தகாத முறையில் பெறுவதும் ஆகுமானதாகும் என்கின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: என் தொடர்பாக கூட இவரின் செல்வத்தைக் கொள்ளை அடியுங்கள் என்று ஃபத்வா கொடுத்துள்ளனர். அஹ்மதிகளின் செல்வத்தை கொள்ளையடியுங்கள் என்ற அஹ்மதியல்லாத ஆலிம்களின் ஃபத்வா இன்றும் கூட உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இவர்களின் அதாவது அஹ்மதிகளின் செல்வத்தை கொள்ளையடியுங்கள் என்று இவர்கள் ஃபத்வா கொடுத்துள்ளனர். எதுவரையென்றால் இவர்களின் மனைவிமார்களையும் பிரியுங்கள் என்றும் ஃபத்வா கொடுத்துள்ளனர். ஆனால் இஸ்லாத்தில் இதுபோன்ற தூய்மையற்ற போதனைகள் இருக்கவில்லை. அது ஒரு தூய்மையான மார்க்கமாக இருந்தது. இஸ்லாத்தின் உதாரணத்தை நாம் இவ்வாறு கூறலாம். அதாவது ஒரு தந்தை தந்தைக்கான உரிமைகளை கொடுக்க விரும்புவது போன்றதாகும். அதேபோல் குழந்தைகளில் பரஸ்பரம் ஒருவருக்கு மற்றவரின் மீது கருணை இருக்க வேண்டும் எனவும் விரும்புகிறார். ஒருவர் மற்றவரை அடிக்க வேண்டும் என அவர் விரும்புவதில்லை. இதே போல் இஸ்லாமும் இறைவனுக்கு யாரும் இணையாக இருக்கக் கூடாது என்று விரும்பும் அதே வேளையில் மனிதர்களுக்கிடையே அன்பு மற்றும் ஒற்றுமை இருக்க வேண்டும் என்றும் அது விரும்புகிறது. (லெக்சர் லூதியானா. ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 281) இந்த போதனைகளைப் பின்பற்றிதான் உலகில் மீண்டும் இஸ்லாத்தின் மேன்மையையும், மகத்துவத்தையும், நிலைநாட்ட முடியும். அதாவது இறைவனுக்குரிய உரிமையையும் அடையாளம் காண வேண்டும். ஒருவர் மற்றவருக்கு வழங்க வேண்டிய உரிமையையும் அடையாளம் காண வேண்டும்.

யார் எந்த மார்க்கத்தைச் சார்ந்தவர் என்று பார்க்காமல் மனித குலத்தில் அன்பையும் நேசத்தையும் உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். அநீதியைக் கையாண்டு அப்பாவிகளைக் கொல்வதற்குப் பகரமாக இஸ்லாத்தின் அமைதி, சாந்தி மற்றும் சமாதானத்தின் வாளைக் கொண்டு உள்ளத்தைக் கொள்ளை கொண்டு அவர்களை இறைவன் மற்றும் அவனது தூதரின் பாதங்களில் கொண்டு

வந்து சேர்க்க வேண்டும். தற்கொலைத் தாக்குதல் நடத்தியோ அல்லது அநீதியிழைத்தோ அல்லாஹ்வின் வெறுப்பை சம்பாதிப்பதற்குப் பகரமாக அவனுடைய அன்பு மற்றும் நெருக்கத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டும். தனது அநீதியான செயல்களால் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்களுக்கு மேலும் வாய்ப்பளிப்பதற்குப் பகரமாக இஸ்லாத்தின் அடைக்கலத்தை தந்தையின் அன்பின் நிழலாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

இவர்கள் இதிலிருந்து விலகவில்லை யென்றால் நினைவில் கொள்ளுங்கள்! உலக சூழ்ச்சிகள் மற்றும் தாக்குதல்களால் ஒருபோதும் இஸ்லாத்தை உலகில் பரப்ப இயலாது. வழி தவறிய இந்த மக்கள் இஸ்லாத்தின் மீது செய்கின்ற ஒவ்வொரு தாக்குதல்களும் நாம் முன்பை விட அதிகமாக நமது பொறுப்புகளை நிறைவேற்றுவதன் பக்கம் நம்மை கவனமூட்டக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதை அஹ்மதிகளாகிய நாம் நினைவில் கொள்ள வேண்டும். இஸ்லாத்தின் பெயருக்கு அவமரியாதை ஏற்படுத்தக்கூடிய ஒவ்வொரு செயலுக்குப் பிறகும் நாம் என்னுடைய மார்க்கத்தின் அடித்தளம் அமைதி மற்றும் சமாதானத்தில் உள்ளது என்பதை உலகிற்குக் கூற வேண்டும். இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்களில் எவரேனும் அமைதி மற்றும் சமாதானத்தை சீர்குலைக்கக்கூடிய வேலையைச் செய்தால் அவர்கள் தமது சுயநலன் கருதியோ அல்லது தனது அமைப்பின் சுயநலன் கருதியோ அவ்வாறு செய்கின்றனர். இதற்கும் இஸ்லாத்தின் போதனைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இது முற்றிலும் தகாத செயலாகும். இதனை செய்பவர்களே இதற்கு எந்நிலையிலும் பொறுப்பாளிகள் ஆவர். இது இஸ்லாமும் அல்ல; இஸ்லாமிய போதனைகளும் அல்ல. அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த விஷயத்தை எடுத்துக் கூறுவதற்காக எல்லா நாடுகளிலும் முயற்சி செய்கிறது. இது அல்லாஹ்வின் அருளாகும். இப்போது அல்லாஹ்வின் அருளால் ஊடகங்கள் மூலமாக அதற்கு நல்ல தாக்கமும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

பத்திரிகையில் கட்டுரை எழுதுபவர்கள் எழுதுகிறார்கள்: இப்போது ஃபிரான்ஸில் அநீதியான கொலை நடந்துள்ளது. அதைப் பற்றி எழுதும்போதும் இந்த எழுதுபவர் எழுதுகிறார். இந்த விஷயம் மார்க்கப்போர் ஆரம்பமாகி விட்டது என்பதன் பக்கம் கவனத்தைத் திருப்புகிறது. ஆனால், அவரே எழுதுகிறார். ஆனால், இது உண்மையல்ல. இது மார்க்கத்தின் சாக்கில் சுயநலவாதிகளின் போர் ஆகும். போப் சாஹிபும் மிகச் சிறந்த கருத்தைக் கூறியுள்ளார். இது சந்தேகமின்றி உலகளாவிய போராக ஆகி விட்டது. ஆனால், இது மார்க்கப் போர் அல்ல. சுயநலனுக்கான போராகும். தங்களுடைய சுய நோக்கத்திற்காக இத்தகைய செயல்களைச் செய்பவர்களின் போர் ஆகும். ஏனென்றால், எந்த மார்க்கமும் அநீதியின் போதனையை வழங்கவில்லை. ஆக, இதுபோன்று சில முஸ்லிம் அல்லாதவர்கள் தமது மக்களைக் கட்டுப்படுத்தி சமாளித்து வருகின்றனர். ஆனால், இந்த அநீதி அதிகமாகும்போது அதன் எதிர்மறையான நடவடிக்கைகளும் வெளிப்படுகின்றன. எனவே, நம்முடைய பொறுப்புகள் மிக அதிகமாகி விட்டன. நாம் இஸ்லாத்தின் அமைதியின் தூதுச் செய்தியை உலகில் எல்லா இடங்களிலும் பரப்ப வேண்டும். இது ஒரு கடமையாகும். ஆனால் இன்னொன்று என்னவென்றால், எவர்கள் வரை நம்முடைய தூதுச்செய்தி எட்டியிருக்கிறதோ அவர்கள் நாம் கூறுவதற்கு எதிரான கருத்தை உருவாக்க முயற்சி செய்கின்றனர்.

ஒருவர் எனக்கு எழுதினார்: ஒரு மனிதர் ஏறக்குறைய அவர் இஸ்லாத்தை விட்டு வெளியேறி முர்தத் ஆகி விட்டார். அவர் என்னைப் பற்றி ஒரு *Tweet* செய்துள்ளார். அநேகமாக எனது புகைப்படத்தைக் கூட இணைத்துள்ளனர். அதாவது, இஸ்லாம் அமைதியின் மார்க்கமாகும். மேலும் ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் அநீதியைத் தடுத்துள்ளார்கள் என்று எழுதியுள்ளார். ஆனால் அதைத் தொடர்ந்து தன் தரப்பிலிருந்து இவ்வாறான கேலி செய்யும் விதத்திலான கருத்தைக் கூறியுள்ளார். அதாவது, ஆனால் இந்தக் கட்டளை பெண்களுக்கு இல்லை. மேலும், இஸ்லாத்தை விடுபவர்களுக்கு கிடையாது. இன்னதற்கு கிடையாது; இன்னதற்கு கிடையாது என்று எழுதியுள்ளார். இஸ்லாத்தின் அமைதியை விரும்பும் நிலையை அஹ்மதிய்யா ஜமாஅத் எடுத்துரைத்து வருகிறது. மேலும், அதன் மூலம் மக்கள் நல்ல தாக்கத்திற்குள்ளாகின்றனர் என்பதைக் கண்டு அந்த தாக்கத்தை செயலிழக்கச் செய்வதற்கு இவர்கள் முயற்சி செய்கின்றனர். இன்றைய நாட்கள் இந்த *Tweet, Facebook* போன்ற ஊடகங்களின் மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் மாறாக இலட்சக்கணக்கான மக்கள் வரை இது சென்றடைகிறது. இவர்களைக் கண்காணித்து இவர்களுக்கு பதிலளிப்பதும் நமது பணியாகும். இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை எட்ட வைக்கும் பெரும்பாலான பணிகளை நாம் செய்ய வேண்டியதுள்ளது. கடந்த காலத்தை விட தற்போது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலம் உலகில் இஸ்லாத்தின் அறிமுகம் நல்ல முறையில் ஏற்பட்டுள்ளது என்ற போதிலும், இந்தப் பணி திருப்தி அளிக்கும் விதத்தில் நடைபெற்று விட்டது என்று நம்மால் கூற முடியாது. எதிர்ப்பின் இந்தக் காலக்கட்டத்தில் இஸ்லாத்திற்கு எதிராக முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்தும் ஜமாஅத்திற்கு எதிராக பிற முஸ்லிம்களிடமிருந்து பகைமை வெளிப்படும் இந்தத் தருணத்தில் நாம் ஞானத்துடனும், புரிதலுடனும் செயல்பட வேண்டும்.

இஸ்லாம் உலகில் பரவும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. மேலும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி இப்போது அஹ்மதிய்யத்தின் மூலமே ஏற்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இது அல்லாஹ் விதித்த ஒன்றாகும். ஆனால், இந்த முன்னேற்றத்தின் காட்சியை நமது வாழ்நாளிலேயே காண வேண்டும் என்பதற்கு நாம் முயற்சியும் செய்ய வேண்டும். துஆவும் செய்ய வேண்டும். மேலும் நமது பலவீனங்கள் இந்த முன்னேற்றத்தை நம்மிடமிருந்து தூரம் விலக்கி விடக்கூடாது. எனவே, நமது பலவீனங்கள் மறைக்கப்படுவதற்கும் அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதற்கும் நமக்கு கடின உழைப்பு மற்றும் துஆவின் தேவை உள்ளது.

நான் கூறியது போன்று இஸ்லாத்திற்கு எதிரான சக்திகளும் நமக்கு எதிராவார்கள். மேலும், பெயர் தாங்கி ஆலிம்களின் பின்னால் செல்லக்கூடிய முஸ்லிம்களும் நமக்கு எதிராக உள்ளனர். ஆனால் எல்லா வகையான அச்சத்தையும் நீக்கி விட்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நோக்கத்தை பூர்த்தி செய்ய முயற்சி செய்ய வேண்டும். இப்போது சில பத்திரிகை நிருபர்கள் கேள்வியும் எழுப்புகின்றனர். ஐரோப்பாவிலும் என்னிடம் கேள்வி கேட்டனர். சுவீடனிலும் ஒரு பத்திரிகை நிருபர் என்னிடம் ஒரு கேள்வியைக் கேட்டார். அதாவது, உங்களுக்கு தீவிரவாத இயக்கங்கள் தரப்பிலிருந்து அச்சுறுத்தல் இருக்கிறதே? உங்களுடைய உயிருக்கு ஆபத்து உள்ளதே? எவ்வாறு நீங்கள் உங்களது பணிகளைச் செய்வீர்கள் எனக் கேட்டார். நான் கூறினேன். சந்தேகமின்றி ஆபத்து இருக்கிறதுதான். ஜமாஅத் உறுப்பினர்களுக்கு ஆபத்து உள்ளதுதான். ஆனால், இந்த ஆபத்துகள் எங்களை எங்களுடைய பணியிலிருந்து தடுத்து விட இயலாது. ஆபத்து எல்லாருக்கும் எல்லா இடங்களிலும் உள்ளது. பிறகு நான் கூறினேன். உங்களுக்கும் ஆபத்து உள்ளது. இது அஹ்மதி, முஸ்லிம் அல்லாதவர் என்ற கேள்விக்கு இடமில்லை. எவர் இந்த சுயநலவாதிகளின் அஜெண்டாவிற்கேற்ப செயல்படவில்லையோ அல்லது அவர்களின் எல்லா சொல்லுக்கும் ஆமாம் போடவில்லையோ அவரின் உயிரின் ஆபத்து உள்ளது.

ஆனால், அஹ்மதிகளுக்கு தேசியவாதம் புரிபவர்களும் எதிராக உள்ளனர் அல்லது இஸ்லாத்திற்கு ஆதரவாளர்களும் எதிராக உள்ளனர். எங்களுக்கு இரு தரப்பிலிருந்து ஆபத்து உள்ளது. ஆனால், எந்நிலையிலும் ஒரு நம்பிக்கையாளர் இந்த விஷயங்களைப் பொருட்படுத்துவதில்லை. மேலும் ஈமானில் நிலைத்திருக்கிறார். மேலும் ஒவ்வோர் அஹ்மதியும் இருப்பார்கள் – இன்ஷா அல்லாஹ்.

இன்றைய நாட்களில் உலகின் நிலைமைகளிலிருந்து ஒவ்வொரு தனி நபரும் பிறகு ஒரு ஜமாஅத் என்ற அளவில் ஜமாஅத்திற்கும் உலகில் எல்லா இடங்களிலும் தீயவர்களின் தீங்கிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு நான் துஆக்கள் மற்றும் ஸதக்காவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். நான் கூறியது போன்று உலகின் நிலை மோசத்திலும் மோசமாகிக் கொண்டே செல்கிறது. அல்லாஹ் தீயவர்களின் தீங்குகளை அவர்களின் மீதே திருப்புவாயாக! இஸ்லாத்தை அவப்பெயருக்கு உள்ளாக்குபவர் –களையும் இஸ்லாத்தின் பெயரால் அநீதி மற்றும் கொடுமையிழைத்து அல்லாஹ்வின் மார்க்கத்தை அவப்பெயருக்கு உள்ளாக்குபவர்களையும் பிடிப்பதற்கு அல்லாஹ் விரைவில் ஏற்பாடு செய்வானாக! மேலும் அனைத்து இன்னல்களையும், கஷ்டங்களையும் நீக்குவானாக!

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆக்களின் பக்கம் கவனமூட்டியவாறு ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: துஆக்களின் வாசல் திறக்கப்பட்டவருக்கு அது அருளின் வாசல் திறக்கப்பட்டதற்கு ஒப்பானதாகும். எனவே, அத்தகையவருக்கு கருணையின் வாசல் திறக்கப்பட்டுள்ளது என்பதை நம்புங்கள். நீங்கள் அல்லாஹ்விடம் எதையெல்லாம் கேட்டீர்களோ அவற்றில் அவை எல்லாவற்றிற்கும் மேலாக அவனின் பாதுகாப்பைத் தேடுவது அவனுக்கு விருப்பமானதாகும்.

பிறகு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: துஆ அந்த நேரத்தில் வந்து விட்ட சோதனை மற்றும் இதுவரை வராத சோதனைகளுக்கு எதிராக பலனளிக்கிறது. மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் துஆ செய்வதை எப்போதும் உங்கள் மீது கடமையாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

அல்லாஹ்வின் அடியார்களே! துஆ செய்வதைக் கட்டாயமாகப் பேணுவது உங்கள் மீது கடமையாகும். (சுனன் திர்மிதி அப்வாபுத் த.ஃவாத் ஹதீஸ் 3548)

பிறகு அன்னார் இன்னொரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: அல்லாஹ்வின் பார்வையில் துஆவை விட கண்ணியத்திற்கு தகுதி வாய்ந்தது வேறொன்றும் இல்லை. (சுனன் திர்மிதி. அப்வாபுத் த.ஃவாத் பாபு மாஜாஅ ஃபீ ஃபஸ்லுத் துஆ ஹதீஸ் 3370)

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸதக்காவைப் பற்றி கூறினார்கள்: சோதனைகள் மற்றும் நெருப்பிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு ஸதக்கா வழங்குங்கள். (கன்ஸுல் உம்மால் தொகுதி 5 பக்கம் 148. கிதாபுஸ் ஸக்காத்து பாபு ஃபிஸ்ஸஹாயி வஸ்ஸத்க்கத்தி. ஹதீஸ் 15975, 15978 தாருல் குதுபுல் இல்மிய்யா. பைரூத் லபனான் 2004)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறும் கூறியுள்ளார்கள்: அதாவது ஒவ்வொரு முஸ்லிமும் ஸதக்கா வழங்குவது கடமையாகும். எங்களிடம் ஏதுமில்லாயே நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று சஹாபாக்கள் கேட்டதற்கு அவர்கள் நல்ல விஷயங்களை செயல்படுத்த வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடக்க வேண்டும். மேலும் தீய விஷயங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும். இதுவே அவருக்கு ஸதக்கா ஆகும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (சஹீஹ் புகாரி கிதாபுல் அதப் பாபு குல்லு ம.ஃரூ.ஃபின் ஸதக்துன் ஹதீஸ் 6022)

பொருள் அளவில் ஒருவர் ஸதக்கா கொடுத்து விட்டால் அவர் நல்ல விஷயங்களை செய்ய வேண்டாம் என்பது இதன் பொருளல்ல. தீயவற்றிலிருந்து தவிர்ந்திருக்கா விட்டாலும் ஒன்றுமில்லை. அதற்குப் பதிலாக ஸதக்கா கொடுத்து விட்டோம் என்பதன்று. இது அல்லாஹ் தன் அடியார்கள் மீது செலுத்தும் கருணையின் பார்வையாகும். அதாவது ஒருவர் நிர்பந்தத்திற்கு ஆளானவர் என்றால் அவரிடம் செல்வம் இல்லை எனில் நன்மை செய்வது மற்றும் தீமையிலிருந்து தவிர்ந்திருப்பதே அவருக்கு ஸதக்காவாக ஆகி விடுகின்றது.

நன்மை செய்யாமல் மற்றும் தீமையிலிருந்து தவிர்ந்திருக்காமல் ஒருவர் இருந்தால் அவருடைய செல்வத்தை ஸதக்காக கொடுப்பது எவ்வித முக்கியத்துவமும் பெறாது. எவ்வாறு பகட்டாக தொழக்கூடிய தொழுகைகள் எவ்வித முக்கியத்துவத்தையும் பெறுவதில்லையோ, மேலும் அவர்களின் முகத்தில் விட்டெறியப்படுகிறதோ அதே போன்று ஸதக்காவிற்கு எவ்வித முக்கியத்துவமும் இல்லை.

ஒரு நம்பிக்கையாளர் ஸதக்கா கொடுக்கும் போது துஆ செய்யும் போது அவர் தனது எல்லா செயல்களையும் இறைவனின் விருப்பத்திற்கேற்ப அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதே அவரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அப்படிப்பட்ட நிலைமை உருவாகும் போது அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதற்கு அது காரணியாக ஆகி விடுகிறது. மேலும் அது மனிதனை கஷ்டங்கள் மற்றும் துன்பங்களிலிருந்து பாதுகாக்கிறது.

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறினார்கள்: அதாவது ஸதக்கா மற்றும் துஆவினால் தீங்கு விலகி விடுகின்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 81,82; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது.) பிறகு துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு என்ன நிலை இருக்க வேண்டும் என்பது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மனிதன் தன்னிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அவசியமானதாகும். தீமைகளிலிருந்து விலக முடியவில்லை என்றால் மேலும் இறைவன் விதித்துள்ள வரம்பை மீறுகிறார் என்றால் துஆவில் எவ்வித தாக்கமும் இருப்பதில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 27; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது.) அல்லாஹ் விதித்துள்ள எல்லைக்குள் இருந்தவாறு துஆக்கள் மற்றும் ஸதக்காவின் பக்கம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலம் நாம் அல்லாஹ்வின் அருளை ஈர்த்துக் கொண்டே செல்பவர்களாக வேண்டும்.

துஆவின் பக்கம் நமக்கு கவனமூட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எப்போதும் துஆ செய்கிறேன். ஆனால் நீங்களும் எப்போதும் துஆவில் மூழ்கியிருக்க வேண்டும். தொழுங்கள். பாவமன்னிப்புக் கோரிக் கொண்டேயிருங்கள். இந்த நிலைமை ஏற்பட்டு விட்டால் அல்லாஹ் பாதுகாப்பான். முழு வீட்டிலும் ஒரு மனிதராவது இவ்வாறு இருந்தால் அவரின் காரணமாக மற்றவர்களையும் அல்லாஹ் பாதுகாப்பான். குறிப்பாக ஈமான் கொண்டவர்களின் பக்கம் அல்லாஹ் திரும்புகிறான். மேலும் தானே அவர்களைப் பாதுகாக்கின்றான்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் ஓர் உண்மையாளரோடு ஒருபோதும் அவிசுவாசம் காட்டுவதில்லை. முழு உலகமும் அவரை எதிர்த்தாலும் அவருக்கு எவ்வித இழப்பையும் ஏற்படுத்த முடியாது. இறைவன் பெரும் ஆற்றல் மற்றும் வல்லமை உள்ளவனாவான். மேலும் மனிதன் ஈமானிய ஆற்றலோடு அவனின் பாதுகாப்பின் கீழ் வருகிறான். மேலும் அவனது ஆற்றல்கள் மற்றும் வல்லமையின் அற்புதங்களைக் காண்கின்றான். பிறகு அவருக்கு எவ்வித இழிவும் வராது. நினைவில் கொள்ளுங்கள். இறைவன் ஆற்றல்மிக்கவர்களிலும் ஆற்றல்மிக்கவனாவான். அதாவது, ஒருவர் அதிகமான ஆற்றல் உடையவர் என்றால் அவன் அவரை விடவும் அதிக ஆற்றல் உடையவன் ஆவான். மாறாக, தனது கட்டளைகள் மீதும் ஆற்றல் பெற்றவனாவான். உண்மையான உள்ளத்தோடு தொழுங்கள். துஆவில் மூழ்கியிருங்கள். மேலும் தனது அனைத்து உறவினர்கள் மற்றும் நெருக்கமானவர்களுக்கு முழுமையான முறையில் இறைவனுக்காக ஆகிய எவரும் இழப்பை சந்திப்பதில்லை என்ற போதனையை வழங்குங்கள். இழப்பின் உண்மையான வேர் பாவமாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 67-70; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது.) ஆக, நாம் கலப்பற்ற முறையில் இறைவன் முன் குனிய வேண்டிய மற்றும் அவனிடம் உதவி கோர வேண்டிய தேவை உள்ளது. அவன் அனைத்து இன்னல்களையும், கஷ்டங்களையும் நீக்குவானாக! மேலும் எதிரியை இழப்பிற்குரியவனாக ஆக்குவானாக! ஜமாஅத்திற்கு எதிராக எதிரிகளின் எல்லா தாக்குதல்களையும் திட்டங்களையும் தோல்வியுறச் செய்வானாக!

அல்லாஹ் திருக்குர்ஆனிலும் சில துஆக்களை கற்றுத் தந்துள்ளான். அவற்றை நாம் செய்ய வேண்டும். மேலும் புரிந்து செய்ய வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் துஆ தொடர்பாக இவ்வாறும் வழிகாட்டியுள்ளார்கள். இந்தக் கருத்தை கூறியுள்ளார்கள். அதாவது, அல்லாஹ் திருக்குர்ஆனில் துஆக்களை கற்றுக் கொடுத்திருப்பதன் காரணமாவது ஒரு நம்பிக்கையாளர் கலப்பற்ற முறையில் இந்த துஆக்களை கேட்டால் அல்லாஹ் அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கேயாகும்.

எனவே, துன்பங்கள் நீங்குவதற்கும் தீங்கிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கும் நாம் இந்த திருக்குர்ஆனின் துஆக்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும். திருக்குர்ஆனில் நமக்கு ஒரு துஆ கற்றுத் தரப்பட்டுள்ளது. அதை பொதுவாக தொழுகையிலும் ஓதுகின்றோம். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இதை அதிகமாக செய்து வருமாறு நமக்கு கவனமூட்டியுள்ளார்கள். அந்த துஆ இதுவாகும்.

رَبَّنَآ اٰتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَّفِي الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ அதாவது, எங்கள் இறைவா! எங்களுக்கு உலக நன்மைகளையும் வழங்குவாயாக! மறுமையின் நன்மைகளையும் வழங்குவாயாக! மேலும் எங்களை நெருப்பின் தண்டனையில் இருந்து காப்பாற்றுவாயாக! **(2:202)**

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதன் தனது ஆன்மாவின் மகிழ்ச்சிக்கு இரு விஷயங்களின் தேவை உடையவனாக இருக்கின்றான். ஒன்று, உலகின் குறுகிய வாழ்க்கை மேலும் அதிலுள்ள கஷ்டங்கள் துன்பங்கள் மற்றும் சோதனைகளிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும். இரண்டாவது அவனை இறைவனிடமிருந்து தூரம் விலக்குகின்ற குழப்பம் மற்றும் ஆன்மீக நோய்களிலிருந்து இரட்சிப்பு பெற வேண்டும் என்பதாகும். உலகின் நன்மை என்பது பௌதீகமான மற்றும் ஆன்மீகமான எல்லா வகையான தீமை மற்றும் ஒரு அசுத்தமான வாழ்வு மற்றும் இழிவிலிருந்து பாதுகாப்பாக இருப்பதாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: வஃபில் ஆகிரத்தி ஹஸனா. அதாவது, மறுமையின் நன்மைகளும் இவ்வுலக நன்மைகளின் காரணமாக கிடைக்கக்கூடிய கனிகளே ஆகும். மனிதனுக்கு உலகின் நன்மைகள் கிடைத்து விட்டால் அது மறுமையிலும் அவனுக்கு கிடைக்கின்ற நன்மைகளின் அறிகுறியாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 302,303; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது.)

பிறகு நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றப்படுதல் தொடர்பாக கூறினார்கள்: இதன் பொருள் கியாமத்தில் உள்ள நெருப்பு என்பது மட்டுமல்ல. உலகிலும் ஆயிரக்கணக்கான நெருப்புகள் உள்ளன. பிறகு அது தொடர்பாக கூறினார்கள். இதில் விதவிதமான கஷ்டங்கள் உள்ளன. பயம் உள்ளது. உறவினர்களோடு உள்ள விவகாரங்கள் நோய்கள் போன்ற இவையனைத்தும் அடங்கும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஒரு நம்பிக்கையாளர் எல்லா வகையான நெருப்பிலிருந்தும் எங்களை காப்பாற்றுவாயாக என துஆ செய்கிறார். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 190; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது.) பிறகு நிலைமைகள் மோசமாக உள்ள போது சோதனைகள் உள்ள போது பாதங்கள் உறுதியாக இருப்பதில்லை. எனவே, மனிதனின் பாதம் உறுதியாக இருப்பதற்கு நமக்கு துஆவை கற்றுக் கொடுத்துள்ளான். மேலும் எதிரிகளுக்கு எதிரில் அல்லாஹ்வின் உதவியைப் பெறுவதற்கு துஆ கற்றுக் கொடுத்துள்ளான். அது இதுவாகும்:

رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَاِسْرَافَنَا فِيْٓ اَمْرِنَا وَثَبِّتْ اَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ

அதாவது, எங்கள் இறைவா! எங்களுடைய பாவங்களையும், எங்களுடைய செயல்களில் எங்களுடைய வரம்புமீறல்களையும் மன்னிப்பாயாக! மேலும் எங்களுடைய பாதங்களை உறுதிப்படுத்துவாயாக! மேலும் நிராகரிப்பாளர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக! **(3:148)**

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: வெளிப்படையான விஷயம் என்னவென்றால், இறைவன் பாவங்களை மன்னிக்கக் கூடியவன் இல்லையென்றால் பிறகு இப்படிப்பட்ட துஆவை ஒருபோதும் கற்றுத் தந்திருக்க மாட்டான். (சஷ்மயே ம.்.ரி.்.பத். ரூஹானி கஸாயின் தொகுதி 23, பக்கம் 25) பிறகு திருக்குர்ஆனில் இன்னொரு துஆ உள்ளது.

رَبِّ اِنِّيْ لِمَآ اَنْزَلْتَ اِلَيَّ مِنْ خَيْرٍ فَقِيْرٌ அதாவது, என் இறைவா! நன்மையிலிருந்து எதையெல்லாம் நீ என் மீது இறக்குவாயோ நான் அதன் தேவை உடையவனாக இருக்கிறேன். **(28:25)**

இந்த துஆவையும் தொடர்ந்து செய்ய வேண்டும். திருக்குர்ஆனில் வேறு பல துஆக்களும் உள்ளன. அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதற்கு அவைகளை தொடர்ந்து படித்து வர வேண்டும். நான் கூறியது போன்று அல்லாஹ் திருக்குர்ஆனில் இந்த துஆக்களைக் கூறியுள்ளான் என்றால் மனிதன் கலப்பற்ற முறையில் அவனிடம் கேட்டால் அல்லாஹ் அவற்றை ஏற்றுக் கொள்வான் என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆக்கள் உள்ளன. பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்கள் உள்ளன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஒரு துஆ தொடர்பாக கூறுகின்றார்கள்: என் மீது இது போடப்பட்டது. அதாவது அல்லாஹ் எனக்கு இந்த துஆவை கற்றுக் கொடுத்தான். அது இதுவாகும். رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ அதாவது, ஒவ்வொரு பொருளும் உனக்கு தொண்டாற்றுவதற்காகவே உள்ளது. என் இறைவா! என்னை பாதுகாப்பாயாக! என் மீது கருணை காட்டுவாயாக! எனக்கு உதவி செய்வாயாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் என் உள்ளத்தில் இந்தக் கருத்தை உணர்த்தினான். அதாவது, இது மகத்துவமிக்க சொல்லாகும். இது எப்படிப்பட்ட வார்த்தைகள் என்றால் இதை படிப்பவர் எல்லா விதமான இன்னல்களிலிருந்து இரட்சிப்பு பெறுவார் என்று என்னுடைய உள்ளத்தில் இடப்பட்டுள்ளது. (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 264; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது.)

அல்லாஹ் ஜமாஅத்தை, ஜமாஅத் அளவிலும், ஜமாஅத் உறுப்பினர்களை தனிப்பட்ட முறையிலும் எல்லா தீங்குகளிலிருந்தும் காப்பாற்றுவானாக! எதிரிகளின் தீமைகளை அவர்களின் மீதே திருப்புவாயாக! முஸ்லிம்களுக்கு அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவரின் குரலைக் கேட்கும் அறிவையும், புரிதலையும் வழங்குவானாக! மேலும் ஒரே சமுதாயமாகி இஸ்லாத்தின் அமைதியான மற்றும் அழகிய போதனைகளை உலகில் நிலைநாட்டக் கூடியவர்களாகவும், அவற்றில் நிலைநிற்பவர்களாகவும் அவர்கள் இருப்பார்களாக!

தொழுகைக்குப் பிறகு நான் மூன்று ஜனாஸா தொழுகைகளை தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா மதிப்பிற்குரிய Evan Vernon சாஹிப் உடையதாகும். இவர்கள் Belize நாட்டைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த நாட்களில் தமது 49 –வது வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

பெலிஸ் ஜமாஅத்தின் ஆரம்ப அஹ்மதிகளில் ஒருவராவார்கள். இப்போது தப்லீக் செயலராக தொண்டாற்றும் நல்வாய்ப்பை பெற்றுக் கொண்டிருந்தார்கள். 2014 –ஆம் ஆண்டு யூ.கே. –வின் ஜல்ஸா ஸாலானாவிலும் கலந்து கொண்டார்கள். மிகவும் அர்ப்பணிப்புள்ள கலப்பற்ற அஹ்மதியாவார்கள். மிகவும் உணர்வுடைய அஹ்மதியாவார்கள். சிறிது காலத்திற்கு முன்பே இவர்கள் அஹ்மதியாகி இருந்தாலும் எப்படிப்பட்ட கலப்பற்ற தன்மை மற்றும் ஜமாஅத்துடன் எப்படிப்பட்ட தொடர்பு இருந்தது என்றால் பெரும்பாலான பழைய அஹ்மதிகளிலும் அது இருக்காது. அல்லாஹ் இவர்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக! அல்லாஹ் இனியும் இதுபோன்ற அர்ப்பணிப்புள்ள அஹ்மதியை வழங்கிக் கொண்டிருப்பானாக!

இரண்டாவது ஜனாஸா ரப்வாவில் *Nasir Fire and Rescue Service* –ன் இன்சார்ஜ் ஆக இருந்த ஸெய்யது நாதிர் செய்யதைன் சாஹிப் உடையதாகும். இவர் ஸெய்யது குலாம் ஸெய்யதைன் அவர்களின் மகன் ஆவார்கள். இவர்கள் 23 ஜூலை 2016 அன்று இஸ்லாமாபாத்திலுள்ள மருத்துவமனையில் தமது 55 –வது வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இதயத்திற்கு இரத்தத்தை வழங்குகின்ற நரம்பில் இரத்தம் உறைதல் ஏற்பட்டதன் காரணமாக வஃபாத் ஆனார்கள். இவர்களின் தந்தை வழிப் பாட்டி 1905 ஆம் ஆண்டு கடிதம் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தார்கள். ஆனால், வீட்டின் மீதமுள்ளவர்கள் அஹ்மதிகள் அல்ல. நாதிர் செய்யதைன் 1982 –ல் தானே ஆய்வு செய்து பைஅத் செய்தார்கள். கராச்சியில் *B.Sc.* பயின்றார்கள். அதன் பிறகு கராச்சியிலேயே இருந்தார்கள். 1989 –ல் கராச்சியிலிருந்து இஸ்லாமாபாத் மாறுதல் ஆனார்கள். மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவில் மாவட்ட அளவில் பல துறைகளில் தொண்டாற்றுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. மாவட்டத்தின் முஃதமீத் ஆகவும் இருந்தார்கள். கித்மத்தே கல்க் துறையிலும் பணியாற்றியுள்ளார்கள். பல்வேறு இடங்களில் மருத்துவ முகாம் நடத்துவதற்கும் இவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா இஸ்லாமாபாத் மாவட்டத்தின் *Incharge Writer Forum* ஆகவும் தொண்டாற்றும் வாய்ப்பு கிடைத்தது. 1999 இஸ்லாமாபாத்தில் இருந்து ரப்வாவிற்கு மாறுதல் ஆகி விட்டார்கள். பிறகு 2000 –ல் வாழ்க்கை அர்ப்பணம் செய்தார்கள். மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் கீழுள்ள *Nasir Fire and Rescue Service* –ன் இன்சார்ஜ் ஆக இருந்தார்கள். இதேபோல் *Sports Complex* –ன் இன்சார்ஜ் ஆகவும் இருந்துள்ளார்கள். ஜூடோ மற்றும் கராத்தே போன்ற *Marital Arts* –ல் திறம்படைத்தவராக இருந்தார்கள். மேலும் பிற நாடுகளில் பாகிஸ்தானுக்கு பிரதிநித்துவம் வழங்கி வந்தார்கள். ரப்வாவிலும் குத்தாம்களுக்கும் குழந்தைகளுக்கும் *Marital Arts* –ன் பயிற்சியை வழங்கினார்கள். கிலாஃபத்தோடு மிகுந்த ஆழமான தொடர்பு இருந்தது. குறிப்பான விசுவாசத்துடன் தொண்டாற்றக்கூடியவராக இருந்தார்கள். மிகவும் எளிய குணமுள்ளவராக இருந்தார்கள். எப்போதும் சிலரின் முகம் சிரித்தவாறே இருக்கும். எப்படிப்பட்ட கஷ்டமாக இருந்தாலும் எப்போதும் மகிழ்ச்சியாகவே இருந்தார்கள். அல்லாஹ் இவர்களுடன் அங்கும் இதேபோன்றே நடந்து கொள்வானாக! அது இவர்களுக்கும் இவர்களது சந்ததிகளுக்கும் மகிழ்ச்சிக்குக் காரணமாக இருக்கட்டுமாக! அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். ரப்வாவில் இவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். மனைவியைத் தவிர இவர்களின் பெற்றோர்களும் உயிரோடு உள்ளனர். மூன்று மகள்களும், மூன்று மகன்களும் உள்ளனர். இவர்களின் ஒரு மகன் மத்ரஸத்துல் ஹிஃப்ஸில் குர்ஆன் மனனம் செய்து வருகிறார். அல்லாஹ் மர்ஹூமின் பதவியை உயர்த்துவானாக!

மூன்றாவது ஜனாஸா அமெரிக்காவிலுள்ள நியூயார்க்கின் சத்ராக இருந்த மதிப்பிற்குரிய நஸீர் அஹ்மது அயாஸ் சாஹிப் உடையதாகும். 3 ஜூலை 2016 அன்று தமது 69 வது வயதில் இவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

23 மே 1939 –ல் தன்ஸானியாவில் பிறந்தார்கள். 1977 நியூயார்க் வந்தடைந்தார்கள். ஜமாஅத்தின் பணிகளில் பங்கு பெறத் தொடங்கினார்கள். முதலில் பொருளாளராகவும் பிறகு 35 வருடம் நியூயார்க் ஜமாஅத்தின் சதராகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பினைப் பெற்றார்கள். நியூயார்க்கின் பல்வேறு தொழுகை சென்டர்களில் ஒவ்வொரு மாதமும் ஒருமுறை ஜமாஅத்தின் முபல்லிக்குடன் சென்று வந்தார்கள். பொருள் தியாகத்தில் எல்லா திட்டங்களிலும் பங்கு பெறுவதற்கு முயற்சி செய்து வந்தார்கள். ஜமாஅத் சகோதரர்களை ஈமெயில் மூலமும் கடிதங்கள் மூலமும் தியாகங்களின் பக்கம் கவனமூட்டி வந்தார்கள். ஜமாஅத்தின் பணிகளை மிகவும் மகிழ்ச்சியுடனும் பொறுப்பணர்வுடனும் நிறைவேற்றி வந்தார்கள். பொதுவாக இளைஞர்களுக்கும் பயிற்சியை வழங்குவார்கள். பொதுவாக அதிகாரிகள் தமக்குப் பின்னால் இரண்டாவது அணியை ஆயத்தம் செய்வதில்லை. ஆனால், இளைஞர்களுக்கு பயிற்சி வழங்குவது இவர்களது சிறப்பம்சமாக இருந்தது. ஜமாஅத்தின் பணிகளில் அவர்கள் முன் வர வேண்டும் என்பதற்காக இளைஞர்களை ஆயத்தம் செய்து வந்தார்கள். பள்ளிவாயிலில் அல்லது சென்டர்களில் இளைஞர்கள் இளம் பெண்கள் வருவதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார்கள். அதாவது விளையாட்டு போன்ற ஏற்பாடுகளைச் செய்வதால் அவர்களின் கவனம் இங்கு ஏற்பட வேண்டும் என அவ்வாறு செய்தார்கள். இன்றைய இளைஞர்களை வீணாவதிலிருந்து தடுப்பதற்க அவ்வாறு செய்தார்கள். எல்லா வாரமும் தொடர்ந்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் தஃலீம் வகுப்புகள் நடத்தி வந்தார்கள். இப்போது அது தாஹிர் அகாடெமி என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. நியூயார்கின் *Humanity First* –ன் டைரக்டராகவும் இருந்தார்கள். இதில் இவர்கள் பெரும் பணியாற்றி இருக்கிறார்கள். சதராக இருந்தும் எல்லாப் பணிகளையும் செய்து வந்தார்கள். சென்டரில் ஏதேனும் குப்பைகள் இருந்தால் அதை எடுத்து வெளியே போடுவார்கள். சுத்தப்படுத்துவார்கள். தொழுகையை முறையாகப் பேணக் கூடியவராக இருந்தார்கள். அங்கேயே மக்பரா மூஸியாவில் இவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். இவர்களின் மனைவி மற்றும் ஒரேயொரு மகள் மட்டுமே உள்ளனர்.

அல்லாஹ் மர்ஹூமோடு கருணையோடும் மன்னித்தலோடும் நடந்து கொள்வானாக! ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களும் கூட ஒருமுறை இவர்களை நீங்கள் அமெரிக்காவின் ஜமாஅத்துகளில் ஒரு முன்மாதிரி சதர் ஆவீர்கள் என்று கூறினார்கள். எப்போதும் இருப்பார்களாக! இவர்களைப் போன்று இன்னும் பலரை அல்லாஹ் உருவாக்குவானாக! 35 வருடங்கள் வரை கலப்பற்ற முறையில் சதராக தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்துள்ளது.

அமெரிக்காவின் அமீர் சாஹிப் மற்றும் நாயிப் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: அன்னார் மிகவும் பணிவுடன் தொண்டாற்றக் கூடியவர்களாக இருந்தார்கள். மேலும் ஜமாஅத் பணிகளில் எல்லாரையும் விட அதிகமாக பங்கெடுப்பார்கள். மேலும் மற்றவர்களோடு இணைந்து ஒரு பணியாளரைப் போன்று வேலை செய்வார்கள்.

எவ்வாறிருப்பினும், இவர்கள் அனைவரின் பதவிகளையும் அல்லாஹ் உயர்த்துவானாக! மன்னிப்பானாக! நான் கூறியது போன்று தொழுகைக்குப் பிறகு ஜனாஸா தொழுகை தொழ வைப்பேன்.

---

*(8-வது பக்கத்தின் தொடர்ச்சி…)*

சந்தர்ப்பங்களில் நான் நிகழ்த்திய சொற்பொழிவுகளையும் கேளுங்கள் என்பதை எனது போதனையாக நான் உங்களுக்கு கூறிக் கொள்கின்றேன். இதன் மூலமாக அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் உங்களுக்கு இருக்கும் நன்றியுணர்வுள்ள தொடர்பு வலுவடைவதுடன் மட்டும் அல்லாமல் முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா(M.T.A.)வின் மற்ற நிகழ்ச்சிகளைப் பார்ப்பதன் மூலமாக இஸ்லாத்தின் அழகு மற்றும் அஹ்மதிய்யத்தின் பல்வேறு சிறப்புகள் பற்றிய உங்களது அறிவும் அதிகரிக்கும்.

இறுதியில், இதனையே நான் உங்களுக்கு கூற விரும்புகின்றேன். அதாவது, ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டதன் காரணமாக குறிப்பாக ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்துள்ள துஆக்களிலிருந்து அருள்களைப் பெறுபவர்களாக நீங்கள் ஆகி விடுவீர்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

“நான் அல்லாஹ்விடம் துஆ செய்கின்றேன். அல்லாஹ்வுக்காக இந்த மாநாட்டிற்காக பயணம் மேற்கொள்கின்ற ஒவ்வொருவருடனும் அல்லாஹ் இருப்பானாக! அவர்களுக்கு மகத்தான நற்கூலியை வழங்குவானாக! அவர்கள் மீது கருணை காட்டுவானாக! இறைவா! மேலானவனே! வழங்குபவனே! கருணை காட்டுபவனே! துன்பங்களை அகற்றுபவனே! இந்த எல்லா துஆக்களையும் ஏற்றுக் கொள்வாயாக! எங்களுக்கு எங்களது எதிரிகள் மீது ஒளிமயமான அடையாளங்களுடன் வெற்றியை வழங்குவாயாக! ஒவ்வோர் ஆற்றலும் சக்தியும் உனக்கு தான் இருக்கின்றது. ஆமீன்.”

(7 டிசம்பர் 1891 -ல் வெளியிடப்பட்ட பிரசுரம்)

அல்லாஹ் உங்களது ஆண்டு மாநாட்டிற்கு மகத்தான வெற்றியை வழங்குவானாக! உங்கள் அனைவருக்கும் அதிகமாக இறையச்சத்திலும் ஆன்மீகத்திலும் முன்னேறுவதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

வஸ்ஸலாம்.

உங்களது நலம் விரும்பி
மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

**ஜமாஅத்திலுள்ள ஒவ்வொரு நபரும் கலீஃபத்துல் மஸீஹின் வழிகாட்டல்கள் மற்றும் கட்டளைகளுக்கு ஏற்ப செயல்பட்டால் பிறகு உயர் தகுதியிலுள்ள கட்டுப்படுதலும் ஒற்றுமையும் நிலைபெறும். மேலும், இஸ்லாத்தைப் பரப்புவதற்கும் அதன் முன்னேற்றத்திற்கும் மனித இனத்திற்கு தொண்டாற்றுவதற்கான வியக்கத்தக்க வழிகள் திறக்கும்.**

**நீங்கள் உங்களது அகத்தில் மாற்றத்தை உருவாக்க முயற்சி செய்யவில்லை என்றால், நீங்கள் மற்றவர்களுடன் நடந்து கொள்ளும் விதத்திலும் செயல்களிலும் ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டு வரவில்லை என்றால் பிறகு உங்களுக்கும் ஏனைய முஸ்லிம்களுக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இல்லை.**

**உங்களது முன்மாதிரி எத்தகையதாக இருக்க வேண்டும் என்றால், ஒவ்வொருவரும் உங்களது சுற்றுப்புறத்தில் உங்களது நன்மை மற்றும் பழக்கவழக்கங்களைப் பற்றி புகழ்ந்து கூறுபவராக இருக்க வேண்டும். உங்களது பழக்க வழக்கங்கள் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்றால், அவற்றில் நீங்கள் எல்லா வகையான தீமைகளையும் எந்த அளவு விட்டு விட வேண்டும் என்றால், உங்களது முன்மாதிரியில் உயர்வான நிலையிலுள்ள இஸ்லாமிய பண்புகளையும் மரபுகளையும் பார்க்க முடிய வேண்டும். ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்ற அனைவரும் இந்த உயர்வான நல்லொழுக்கப் பண்புகளைப் பின்பற்றி நடந்தால் அதனால் ஓர் அழகிய சுற்றுச்சூழல் உருவாகி விடும்.**

**நான் உங்களுக்கு இந்தப் போதனையையும் வழங்குகின்றேன். அதவாது, நீங்களும் உங்களது குடும்பத்தைச் சார்ந்தவர்களும் அதிகமாக M.T.A –வைக் கேட்க வேண்டும். அதில் எனது குத்பாக்களையும் நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் நான் நிகழ்த்தியுள்ள சொற்பொழிவுகளையும் கேட்க வேண்டும்.**

## *2016 –ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற கானாவின் ஆண்டு மாநாட்டிற்காக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் வழங்கியுள்ள தூதுச் செய்தி.*

கானா(மேற்கு ஆப்பிரிக்கா)வின் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 84 -வது ஆண்டு மாநாடு 2016 -ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 -ஆம் தேதியிலிருந்து 9 -ஆம் தேதி வரை பாகே அஹ்மது - அஹ்மதின் தோட்டத்தில் நடைபெற்றது. பாகே அஹ்மது என்பது 480 ஏக்கர்களைக் கொண்ட ஓர் அழகான நிலப்பரப்பிலுள்ள வளாகம் ஆகும். அங்கு தான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு நடைபெறுகிறது. ஆண்டு மாநாட்டில் கானா குடியரசின் துணைத் தலைவரும், முக்கிய அமைச்சர்களும் அரசாங்கத்திலுள்ள ஏனைய உயர் அதிகாரிகளும் Traditional Chief -களும் அப்பகுதியிலுள்ள கண்ணியத்திற்குரிய நபர்களும் கலந்து கொண்டனர். மேலும் நைஜீரியா மற்றும் ஜெர்மனியின் அமீர்மார்களும் தங்களது ஜமாஅத் சகோதரர்களுடன் மாநாட்டில் கலந்து கொள்வதற்கான நல்வாய்ப்பைப் பெற்றனர். மேற்கு ஆப்பிரிக்காவின் மற்ற நாடுகளிலிருந்து கூட விருந்தினர்கள் கலந்து கொண்டனர். ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டவர்களது மொத்த எண்ணிக்கை 36,000 பேர்கள் ஆகும். இதைப் பற்றிய முழுமையான அறிக்கையை இலண்டனிலிருந்து வெளிவரும் பத்திரிகையான அல் ∴பஸ்ல் இன்டர்நேஷனலின் 2016 -ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 -ஆம் தேதி இதழின் 12 -ஆம் பக்கத்தில் பார்க்க முடியும். ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மாநாட்டிற்காக மிகுந்த பரிவுடன் தனது தூதுச் செய்தியையும் அனுப்பி வைத்திருந்தார்கள். பத்ர் பத்திரிகையின் வாசகர்கள் பயன் பெறுவதற்காக அந்த தூதுச் செய்தியை கீழே தருகின்றோம். அல்லாஹ் நம் அனைவருக்கும் ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் இந்த பொன்னான போதனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கேற்ப அதற்குரிய உரிமையைச் செலுத்தியவாறு செயல்படுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன். (ஆசிரியர்)

எனது அன்பிற்குரிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு.

நீங்கள் 7 -ஆம் தேதி முதல் 9 -ஆம் தேதி வரை உங்களது ஆண்டு மாநாட்டை நடத்துகின்றீர்கள் என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளேன். அல்லாஹ் உங்களது மாநாட்டை வெற்றி பெறச் செய்வானாக! மாநாட்டில் கலந்து கொள்கின்ற எல்லாரும் இந்த தனிச்சிறப்புமிக்க மாநாட்டிலிருந்து அளவற்ற ஆன்மீக அருள்களையும் எண்ணற்ற பரக்கத்துகளையும் பெற்றுக் கொள்பவர்களாக ஆகட்டுமாக என நான் துஆ செய்கின்றேன்.

நான் எனது குத்பா பேருரையில் மீண்டும் மீண்டும் ஓர் உண்மையான கலப்பற்ற தூய அஹ்மதியாக ஆவதற்காக முயற்சி செய்வதன் முக்கியத்துவத்தைப் பற்றி வலியுறுத்திக் கூறி வருகின்றேன். அல்லாஹ் இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பியதன் நோக்கமும் இதுவேயாகும். அதாவது, மக்களது உள்ளங்களில் இறைவனின் இருப்பின் மீது உண்மையான நம்பிக்கை உருவாக வேண்டும். மேலும், உலகில் இஸ்லாமிய போதனைகளின் மகத்தான முன்மாதிரிகளாகத் திகழ்கின்ற அத்தகைய ஈமானுள்ளவர்கள் உருவாக வேண்டும். எனவே, அவர்களை ஏற்றுக் கொண்டு அவர்களிடம் பைஅத் செய்துள்ள அஹ்மதிகளாகிய நாம் இந்த பூமியில் இஸ்லாத்தின் சிறந்த முன்மாதிரியை நிலைநாட்டியுள்ள அந்த மக்களைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“எனது வருகையின் இரு பெரும் நோக்கங்கள் இருக்கின்றன. முதலாவது நோக்கம், மனிதன் முற்றிலும் தன்னைத்தானே ஏக இறைவனிடம் ஒப்படைக்க வேண்டும். இரண்டாவது நோக்கம், மனிதர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் தனது அன்பையும் அனுதாபத்தையும் வெளிப்படுத்த வேண்டும். எனவே, நீங்கள் எத்தகைய ஈடிணையற்ற முன்மாதிரியை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும் என்றால், அது ஏனைய மதங்களைப் பின்பற்றுபவர்களுக்கு அற்புதங்களின் ஒரு வகையாக தென்பட வேண்டும்.”

(மல்∴பூஸாத் தொகுதி 1, பக்கம் 236)

நீங்கள் உங்களது எண்ணங்களில் இந்த மகத்தான நோக்கத்தை கண்முன் நிறுத்தியவாறு செயல்படுவது அவசியமானதாகும். இதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த ஜமாஅத்தை நிறுவியுள்ளார்கள். நீங்கள் இந்த இரண்டு நோக்கங்களையும் பெறுவதற்காக முயற்சி செய்ய வேண்டும். முதலாவதாக, எல்லாவற்றையும் விட மிகவும் அவசியமான விஷயம் என்னவென்றால், இறைவனுடன் நமக்கு இருக்கின்ற தொடர்பில் நாம் மிகவும் உறுதியானவர்களாக இருக்க வேண்டும். அத்துடன் நன்மைகளை நமக்குள் ஊடுறுவும்படி செய்வதிலும் நமது தொண்டு செய்கின்ற வட்டத்தை நமது அண்டை வீட்டுக்காரர்களில் இருந்து ஆரம்பித்து நமது சமுதாயம் மற்றும் அதற்கும் ஒருபடி மேலாக அதனை முழு மனித இனம் வரை விரிவாக்கிக் கொண்டே செல்ல வேண்டும். நாம் பைஅத் நிபந்தனைகளை எந்த அளவு நிறைவேற்றியுள்ளோம் என்பதையும் நாம் ஆய்வு செய்து பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“இந்த பைஅத் இறையச்சம் கொண்ட ஜமாஅத்தை ஒன்று சேர்ப்பதற்காகவும் அத்தகைய இறையச்சம் கொண்டவர்களின் ஒரு பெரிய கூட்டம் உலகத்தின் மீது தனது நல்ல விளைவை உருவாக்க வேண்டும் என்பதற்காகவும் உள்ளது. மேலும், இவர்களின் ஒற்றுமை இஸ்லாத்தின் அருளுக்கும் மகிமைக்கும் நல்விளைவிற்கும் காரணமாக அமைய வேண்டும். ஒரே கலிமாவினால் ஒன்றுசேர்ந்திருப்பதன் அருளினால் இஸ்லாத்தின் தூய பரிசுத்தமான சேவைகளில் அவர்கள் விரைவில் பயன்பட வேண்டும். மேலும், அவர்கள் சோம்பேறியான, கருமியான, செலவு செய்யாத முஸ்லிம்களாக இருக்கக் கூடாது. தமது பிரிவினை மற்றும் ஒற்றுமையின்மையின் காரணமாக இஸ்லாத்திற்கு கடுமையான இழப்பை ஏற்படுத்துபவர்களைப் போன்று அவர்கள் இருக்கக் கூடாது. மாறாக, எந்த அளவுக்கு அவர்கள் சமுதாயத்திடம் அனுதாபம் காட்ட வேண்டுமென்றால் அவர்கள் ஏழைகளின் அடைக்கலமாகவும் அனாதைகளின் தந்தையாகவும் ஆகி விட வேண்டும். மேலும், இஸ்லாமிய பணிகளை நிறைவேற்ற தம்மை அர்ப்பணிப்பதற்கு ஒருவர் மீது பேரன்பு வைத்திருப்பவரைப் போன்று தன்னை தியாகம் செய்ய தயாராக இருக்க வேண்டும். அவர்களின் பொதுவான அருள்கள் உலகில் பரவ வேண்டும். மேலும், இறை அன்பு, இறைவனது அடியார்களுடன் கருணையுடன் நடந்து கொள்ளுதல் என்ற தூய நீரூற்று ஒவ்வோர் உள்ளத்திலிருந்தும் வெளிப்பட்டு அவை ஓரிடத்தில் ஒன்று சேர்ந்து ஒரு நதியாக ஓடுவது தென்பட வேண்டும். இதற்காகவே அவர்களது எல்லா முயற்சிகளும் இருக்க வேண்டும்.

இறைவன் தன் கம்பீரத்தை வெளிப்படுத்துவதற்காகவும் தன் வல்லமையைக் காட்டுவதற்காகவும் இந்தப் பிரிவை உருவாக்க விரும்பியுள்ளான். உலகத்தில் இறை அன்பு, உண்மையான பாவமன்னிப்பு, தூய்மை, நிம்மதி, சீர்திருத்தம் மற்றும் மனித குலத்தின் மீதுள்ள அனுதாபம் ஆகியவை பரவுவதற்காக அவன் அவ்வாறு உருவாக்க விரும்பியுள்ளான்.

(மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 1, பக்கம் 196,198)

எனவே, நீங்கள் வாய்ச்சொற்களைக் கூறுபவர்களாக மட்டும் இருக்கக் கூடாது. மாறாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன்

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 Thursday 1 SEPTEMBER 2016 Issue No. 26

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

செய்து கொண்ட பைஅத் உடன்படிக்கையின் உண்மையான குறிக்கோளை நிறைவேற்றுபவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். நீங்கள் உங்களிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனென்றால், வெறுமனே வாய் வார்த்தைகளால் மட்டும் உங்களால் இறைவனை மகிழ்விக்க முடியாது. நீங்கள் உங்களிடம் அக மாற்றத்தை உருவாக்க முயற்சி செய்யவில்லையென்றால், மேலும் நீங்கள் பிறருடன் நடந்து கொள்ளும் விதத்திலும் உங்கள் செயல்களிலும் ஒரு நேர்மறையான மாற்றத்தைக் கொண்டு வரவில்லை என்றால் பிறகு உங்களுக்கும் மற்ற முஸ்லிம்களுக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இல்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் தெளிவான சொற்களில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த ஜமாஅத்தில் இணைந்து முதலில் தனது வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது, இறைவன் மீதுள்ள ஈமான் உண்மையானதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு துன்ப வேளையிலும் அது பயன்பட வேண்டும். பிறகு அவனது கட்டளைகளை அற்பமான பார்வையுடன் பார்க்கக் கூடாது. மாறாக, அவனது ஒவ்வொரு கட்டளையையும் மதித்து நடக்க வேண்டும். மேலும் செயலளவில் அதை நீங்கள் மதிக்கின்றீர்கள் என்பதற்கான ஆதாரத்தை தர வேண்டும். (திக்ரே ஹபீப் பக்கம் 436)

உங்களது முன்மாதிரி எத்தகையதாக இருக்க வேண்டும் என்றால் உங்களைச் சுற்றியுள்ள ஒவ்வொருவரும் உங்களது நன்மை மற்றும் உங்களது பழக்க வழக்கங்களைப் புகழ்பவர்களாக இருக்க வேண்டும். அந்தப் பழக்க வழக்கங்களிலிருந்து நீங்கள் ஒவ்வொரு வகையிலுள்ள தீமையையும் எந்த அளவு கை விட்டு விட வேண்டும் என்றால் உங்களது முன்மாதிரியிலிருந்து உயர்ந்த நிலையிலுள்ள இஸ்லாத்தின் மரபுகளும் வழிமுறைகளும் தென்பட வேண்டும். உங்களில் ஒவ்வொருவரும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது போதனைகளுக்கேற்ப உங்களது நிலைமைகளைச் சரிசெய்வதற்கும் உங்களைச் சீர்திருத்துவதற்கும் முடிந்த வரை முயற்சி செய்ய வேண்டும். மாநாட்டில் கலந்து கொள்கின்ற அனைவரும் இந்த உயர்வான நல்லொழுக்க வழிமுறைகளைப் பின்பற்றி நடப்பவர்களாக இருந்தால் அதன் மூலமாக ஓர் அழகிய சுற்றுச்சூழல் உருவாகி விடும். அது உண்மையான முறையில் நன்மையைத் தேடுபவர்களை அஹ்மதிய்யத்தின் அழகின் பக்கம் ஈர்த்துக் கொண்டு வரும். இதுபோன்ற உயர்வான நல்லுதாரணங்கள் மற்றும் பிறருடன் நல்ல முறையில் நடந்து கொள்வது ஆகியவற்றை ஆண்டு மாநாடுகளின் சமயங்களில் மட்டும் தற்காலிகமாக நாம் வெளிப்படுத்திக் காட்டக் கூடாது. மாறாக, அதற்குப் பிறகும் கூட இந்த நிலை நீடிக்க வேண்டும். பிறகு இறையச்சத்திலும் தீமைகளிலிருந்து விலகி இருப்பதிலும் முன்னேறிச் செல்கின்ற ஒரு நிரந்தரப் பயணமாக அது ஆகி விட வேண்டும்.

நான் உங்களுக்கு தப்லீக் தொடர்பாக உங்களது பொறுப்புகளின் பக்கம் கவனமூட்ட விரும்புகின்றேன். தப்லீக் செய்வது ஒவ்வொரு அஹ்மதிக்கும் மிகவும் அவசியமானதாகும். வெற்றிகரமான தப்லீகிற்காக உங்களது சிறந்த முன்மாதிரியை நிலைநாட்டுவதும் மிகவும் முக்கியமானதாகும். எனவே, நமது செயல்கள் இஸ்லாத்தின் போதனைகளுக்கேற்ப இருந்தால் மேலும் நமது ஒவ்வொரு சொல்லும் செயலும் திருக்குர்ஆனின் வழிகாட்டல் -களுக்கேற்ப இருந்தால், நாம் பிறருடன் நடந்து கொள்ளும் விதம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருப்பத்திற்கேற்ப இருந்தால் பிறகு இந்த விஷயம் உங்களது நாட்டில் உள்ளவர்களுக்கு மட்டும் அல்லாமல் முழு உலகத்தில் உள்ளவர்களுக்கும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கு மிகவும் பயனுள்ள ஒரு வழியாக இருக்கும்.

நினைவில் கொள்ளுங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பிரச்சாரத்தை முன்னேற்றமடையச் செய்வது தான் அஹ்மதிய்யா கிலா∴பத்தின் பணியாகும். ஒவ்வோர் அஹ்மதியும் பைஅத் செய்யும் நேரத்தில் பைஅத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவேன் என்றும், காலத்தின் கலீ∴பா எடுக்கின்ற நல்ல தீர்மானங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் உடன்படிக்கை செய்து கொள்கின்றார். கலீ∴பத்துல் மஸீஹின் கையில் பைஅத் செய்கின்ற ஒவ்வோர் அஹ்மதியும் அந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு அவர் பணி செய்வதும் அவசியமானதாகும் என்பதை நினைவில் வைக்க வேண்டும். ஒவ்வொரு நபரும் கலீ∴பத்துல் மஸீஹின் வழிகாட்டல்கள் மற்றும் கட்டளைகளின்படி செயல்பட்டால் உயர்வான தகுதியிலுள்ள கட்டுப்படுதலும் ஒற்றுமையும் நிலைநாட்டப்படும். முன்னேற்றம், இஸ்லாத்தின் தப்லீக் மற்றும் மனித இனத்திற்கு தொண்டு செய்வது ஆகியவற்றிற்கான வியக்கத்தக்க வழிகள் திறக்கும்.

நீங்களும் உங்களது குடும்பத்தினரும் அதிகமாக M.T.A. பார்க்க வேண்டும். மேலும் எனது ஜுமுஆ பேருரைகளையும் பல்வேறு

(தொடர்ச்சி 6-வது பக்கம்...)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

என்னை எவருமே அறிந்திருக்கவில்லை. எவராவது என்னை அடையாளங் கண்டு கொள்ள வேண்டும் என்ற இந்த ஆசையும் எனக்கு இருந்ததில்லை. தனிமையின் மூலையில் அமர்ந்திருந்த என்னை பலவந்தமாக அவனே வெளியில் கொண்டு வந்தான். மறைவாக இருந்து மறைவாகவே மரணிக்க வேண்டும் என்றே நான் விரும்பினேன். ஆனால், நான் உம்மை முழு உலகிலும் கண்ணியத்துடன் புகழ்பெறச் செய்வேன் என்று அவன் கூறினான். எனவே, இவ்வாறு நீ ஏன் செய்தாய் ? என்று அந்த இறைவனிடம் கேளுங்கள். இதில் எனது தவறு என்ன இருக்கின்றது ? அவ்வாறே தொடக்க நாட்களில் எனது கொள்கை இதுவாகவே இருந்தது. அதாவது, எனக்கு மர்யமின் மகன் ஈஸாவுடன் என்ன தொடர்பு இருக்கின்றது ? அவர் நபியாவார். அவர் இறைவனுக்கு நெருக்கமான சான்றோர்களில் ஒருவராக இருக்கின்றார் என்றே நான் கருதினேன். எனது சிறப்பைப் பற்றி ஏதாவதொரு விஷயம் எனக்கு வெளிப்படுத்தப்பட்டால் நான் அதனை ஓர் அம்சத்தில் காணப்படும் சிறப்பாகக் கருதி வந்தேன். ஆனால், பிறகு இறைவனின் வஹி மழையைப் போன்று என் மீது இறங்கியது. அவன் என்னை இந்தக் கொள்கையில் நிலைத்திருக்க விடவில்லை. மேலும், தெளிவான முறையில் நபி என்ற பட்டம் எனக்கு வழங்கப்பட்டது. ஆனால், அது இவ்வாறானதாகும். அதாவது, ஒரு வகையில் நான் நபியாகவும் இன்னொரு வகையில் உம்மத்தியாகவும் (இந்த சமுதாயத்தைச் சார்ந்தவனாகவும்) இருக்கின்றேன். ☆ நான் முன்மாதிரிக்காக இறைவனின் வஹியின் சில சொற்றொடர்களை இந்த நூலிலும் எழுதியுள்ளேன். அவற்றிலிருந்தும் கூட மர்யமின் மகன் ஈஸாவுக்கு எதிரில் இறைவன் என்னைப் பற்றி என்ன கூறுகின்றான் என்பது தெரிய வருகின்றது. 25 வருடங்களாக இறைவனிடமிருந்த தொடர்ச்சியாக வந்த வஹியை நான் எவ்வாறு மறுக்க முடியும் ? எனக்கு முன்பு இறங்கியிருந்த இறைவனின் எல்லா வஹிகளின் மீதும் நம்பிக்கை கொள்வதைப் போன்றே நான் அவனது இந்த தூய வஹியின் மீதும் நம்பிக்கை கொள்கின்றேன். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் இறுதி கலீஃபாவாக மர்யமின் மகன் ஈஸா இருப்பதையும் நான் பார்க்கின்றேன். தூதர்களில் சிறந்தவராக இருக்கின்ற அந்த நபியின் (அதாவது ஹஸ்ரத் முஹம்மது -ஸல்- அவர்களின்) இறுதி கலீஃபாவாக நான் இருக்கின்றேன். எனவே, அவரை விட (ஹஸ்ரத் ஈஸா -அலை- அவர்களை விட) குறைந்த நிலையில் என்னை வைப்பதற்கு இறைவன் விரும்பவில்லை. எவர்களது உள்ளங்களில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீதுள்ள அன்பு அவரை வணங்கும் அளவு சென்று விட்டதோ அத்தகைய மக்களால் எனது இந்த சொற்களை சகித்துக் கொள்ள முடியாது என்பதை நான் நன்கறிவேன். ஆனால், நான் அவர்களைப் பொருட்படுத்துவதில்லை. நான் என்ன செய்வேன் ? நான் எவ்வாறு இறைவனின் கட்டளையை விட்டு விட முடியும் ? எவ்வாறு எனக்கு வழங்கப் பட்டிருக்கும் அந்த வெளிச்சத்திலிருந்து இருளில் என்னால் வர முடியும் ?

சுருக்கமாக, நான் கூறிக் கொள்வது என்னவென்றால், எனது சொற்களில் சிறிதும் முரண்பாடு இல்லை. நான் இறைவனின் வஹியை பின்பற்றுபவனாக இருக்கின்றேன். இதைப் பற்றிய அறிவு எனக்கு இல்லாத வரை நான் தொடக்கத்தில் கூறியவற்றையே கூறிக் கொண்டிருந்தேன். அவன் தரப்பிலிருந்து எனக்கு இதைப் பற்றி தெரிய வந்ததும் நான் ஏற்கனவே கூறி வந்ததற்கு மாற்றமான விஷயங்களைக் கூறினேன். நான் மனிதவாவேன். மறைவானவற்றை அறிந்தவனாக நான் இருக்கின்றேன் என்று வாதம் செய்யவில்லை. விஷயம் இதுவேயாகும். எவர் விரும்புவாரோ ஏற்றுக் கொள்ளட்டும் அல்லது ஏற்றுக் கொள்ளாமல் இருக்கட்டும். இறைவன் அவ்வாறு ஏன் கூறினான் ? என்பதைப் பற்றி எனக்கு தெரியாது. எனினும், இந்த அளவு எனக்கு தெரியும். அதாவது, கிறித்தவர்களுக்கு எதிரில் இறைவனது தன்மான உணர்வு வானத்தில் பொங்கி எழுந்து கொண்டிருக்கின்றது. அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மகிமைக்கு எதிராக எத்தகைய சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்றால் அவற்றின் காரணமாக வானம் பிளந்து விடலாம். எனவே, அந்தத் தூதரின் கீழ்நிலையில் உள்ள ஒரு தொண்டர் இஸ்ரவேலைச் சார்ந்த மர்யமின் மகன் ஈஸாவை விட சிறந்தவராக இருக்கின்றார் என இறைவன் காட்டுகின்றான். எவருக்கு இந்த சொற்களால் கோபமும் ஆத்திரமும் வருகின்றதோ அவர் தமது அந்தக் கோபத்தால் மரணிப்பதற்கான உரிமையைப் பெற்றுள்ளார். ஆனால், இறைவன் தான் விரும்பியதைச் செய்தான். மேலும் இறைவன் தான் விரும்பியதை செய்கின்றான். நீ ஏன் அவ்வாறு செய்தாய் என்று ஆட்சேபனை செய்வதற்கான சக்தி மனிதனிடம் இருக்கின்றதா ?

(ஹகிகத்துல் வஹி பக்கம் 152-155. ரூஹானி கஸாயின் தொகுதி 22)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad